# காலச்சுவடுகள்

VERSION 1.0


2025 ஆண்டு எழுதிய முக்கிய ஆக்கங்களின் தொகுப்பு



ஆசிரியர் : வழக்கறிஞர் காயல் M.N.அஹமது சாஹிபு (விசிக)



திப்பு சுல்தான்



தந்தை பெரியார்



காயிதே மில்லத்



டாக்டர் அம்பேத்கர்



காமராஜர்



முத்துராமலிங்கத் தேவர்



இமானுவேல் சேகரன்



மௌலானா அபுல்கலாம் அஸாத்



காந்தியடிகள்



சர் செய்யது அஹமது கான்



ரெட்டைமலை சீனிவாசன்



அயோத்திதாச பண்டிதர்

# இவர்கள் வழியில்...

**வழக்கறிஞர் காயல் M.N.அஹமது சாஹிபு (விசிக)**



# M.N Ahamed Sahib

**Lawyer | Journalist | Political Analyst | Social Activist | IT Professional**



**Kayalpatnam, Tamil Nadu, India**

## Organizational Roles

**National Council Member**
**Indian Journalists Union**

**State Functionary**
**Viduthalai Chiruthaigal Katchi (VCK)**

**General Secretary**
**Social Justice Council**

**Joint Secretary**
**Tamilnadu All Traders Associations Federation**

**Executive Committee Member**
**Tamilnadu Union of Journalists**

**Special Editor**
**Voice of Journalists Magazine**

## Social Media

- Ahamed Sahib
- SahibTalks
- sahibtalk@gmail.com
- @SahibTalks

## Professional Summary

A multifaceted professional with expertise in Law, Journalism, Politics, IT, and Social Justice Advocacy. Over two decades of experience spanning IT management in Saudi Arabia, legal consultancy in India, and leadership roles in journalism and social organizations.

Currently serving as National Council Member of All Indian Journalists Union, State Campaign Committee Member (Viduthalai Chiruthaigal Katchi – VCK) and State Joint Secretary (Tamilnadu All Traders Associations Federation) Dedicated to social reform, justice, and democratic integrity.

## Present Designation

National Council Member – Indian Journalists Union
2024 – Present

Special Editor, Pattrikayalar Kural Magazine
Tamilnadu Union of Journalists
2023 – Present

Executive Member – Tamilnadu Union of Journalists
2023 – Present

State Campaign Committee Member
Viduthalai Chiruthaigal Katchi (VCK)
2022 – Present

General Secretary – Socio Justice Council
2021 – Present

Advocate – Madras High Court
2019 – Present

Legal Consultant – SAFA Builders Company
2017 – Present



# M.N Ahamed Sahib

**Lawyer | Journalist | Political Analyst | Social Activist | IT Professional**

## Political Affiliation – Viduthalai Chiruthaigal Katchi (VCK)

Viduthalai Chiruthaigal Katchi (VCK), led by Thol. Thirumavalavan MP, is a Tamilnadu–based political party rooted in Ambedkarite ideology, dedicated to social justice, equality, and human rights. Emerging from the Dalit Panthers movement, the party has consistently championed anti-caste activism, secularism, and the empowerment of marginalized communities.

My Role : Currently serves as a State Campaign Committee Member (VCK), contributing to policy analysis, campaign strategy, and public communication efforts to strengthen VCK's mission of democratic and social transformation.

## Indian Journalists Union (IJU)

The Indian Journalists Union (IJU) is one of India's premier national organizations representing working journalists across print, broadcast, and digital media. Established to protect press freedom and the rights of journalists, the IJU plays a key role in advocating for ethical journalism, job security, and freedom of expression within a democratic framework.

The Union engages with the Press Council of India, state journalist bodies, and international media forums to promote transparency, accountability, and professional standards in journalism. It stands as a collective voice defending mediaindependence and the dignity of the journalist community nationwide.

My Role:Serves as a National Council Member (Indian Journalists Union), contributing to policy discussions, professional development programs, and advocacy for journalists' welfare and media integrity across India.

## Advocate – Madras High Court - India

As a practicing Advocate at the Madras High Court, specializes in constitutional, criminal, and public interest litigation. My legal work emphasizes human rights, social justice, and civil liberties, reflecting a deep commitment to democratic and constitutional values.  Provides both legal consultancy and advocacy services, ensuring access to justice for individuals and communities affected by social and administrative injustice.



# M.N Ahamed Sahib

**Lawyer | Journalist | Political Analyst | Social Activist | IT Professional**

## Tamilnadu All Traders Associations Federation

The Tamilnadu All Traders Associations Federation is an umbrella organization representing various trade and business bodies across the state. It works to safeguard the interests of small, medium, and large-scale traders by addressing economic, regulatory, and policy-related challenges that affect the trading community.

The Federation actively engages with government departments, policymakers, and the public to promote fair trade practices, consumer protection, and sustainable business growth. It also plays a vital role in fostering unity among traders and ensuring their voices are heard in legislative and administrative processes.

My Role : Serves as the State Joint Secretary of the Federation, coordinating trade welfare initiatives, policy representations, and outreach activities to strengthen the rights and opportunities of traders across Tamil Nadu.

## Tamil Nadu Union of Journalists (TUJ)

The Tamilnadu Union of Journalists (TUJ) is one of the most active state organizations dedicated to protecting the rights, dignity, and professional ethics of journalists in Tamilnadu. Affiliated with the Indian Journalists Union (IJU), it promotes press freedom, journalistic integrity, and fair working conditions for media professionals.

The TUJ plays a vital role in policy advocacy, training programs, welfare initiatives, and ethical media practices, ensuring thatthe voices of journalists remain strong in a democratic society.

My Role : My role as State Executive Member – Tamilnadu Union of Journalists and Special Editor of Pattrikaiyalar Kural, the official magazine of TUJ, contributing editorial leadership, content review, and socio-political commentary to uphold journalistic excellence.

## Debates and Public Engagement on Social Media

Being an active political analyst and social commentator on digital platforms and television debates. Through my YouTube channel – SahibTalks and other media forums, I am addressing pressing issues like constitutional rights, secularism, caste injustice, and democratic reforms. My debates are widely respected for clarity, legal reasoning, and balanced political critique, promoting civic awareness and social harmony. .



# M.N Ahamed Sahib

**Lawyer | Journalist | Political Analyst | Social Activist | IT Professional**

## Socio Justice Council

The Socio Justice Council is a civil society organization committed to promoting social equality, constitutional values, and human rights across India. It works towards eradicating caste discrimination, communal polarization, and socio-economic inequalities through legal advocacy, public awareness, and policy engagement.

The Council emphasizes inclusive justice, aiming to protect the rights of marginalized communities, women, and minorities, while fostering a culture of equality, fraternity, and democratic accountability as enshrined in the Indian Constitution.

My Role:Serves as the General Secretary (Socio Justice Council), leading organizational strategy, legal interventions, and nationwide campaigns to advance social justice and safeguard civil liberties.

## Social Responsibilities

As a lawyer committed to public welfare, I founded the organization Social Justice Council, where I serve as the General Secretary. I also function as the Secretary of the Kayalpatnam Welfare Trust (KWT).

I hold the position of National Executive Committee Member in the India Hijri Committee, an all-India council of Islamic scholars. I am also part of the executive committees of more than 50 mosques across Tamil Nadu and serve as an advisor to several charitable organizations across various towns.

I have collaborated with scientists from the King Abdulaziz City for Science and Technology (KACST)—Saudi Arabia’s equivalent of ISRO—submitting research papers and engaging in scholarly discussions on lunar research. Notably, my research was presented at the OIC Conference of Islamic countries held in Turkey.

I have also participated in academic discussions with scholars from the Institute of Objective Studies (IOS), New Delhi, presenting reports on the socio-economic conditions of Indian Muslims.

For over 20 years, I have been the Editor of www.ottrumai.in. In 2002, I created the first Qur’an Search Software in Tamil. Through this platform, I have published numerous research articles and online books.

Presented my 15 years Research articles at King Abdul Azeez City for Science and Technology (KACST) in 2004 regarding Universal Lunar Calendar in the light of Islam.



# M.N Ahamed Sahib

**Lawyer | Journalist | Political Analyst | Social Activist | IT Professional**

## 10+ Years of IT Experience – Saudi Arabia

Before my legal and social justice career, I have gained a decade of professional experience in Information Technology while working in Saudi Arabia. .
From 2002 to 2009, I worked in Saudi Arabia in senior IT positions at major organisations such as Almanna Establishment and Tadawi Healthcare (Abraaj Capital). By the age of 30, I had the distinction of serving as an IT Manager overseeing nearly 1,000 engineers. .

I have served in key managerial roles such as IT Operations Manager (Tadawii Group) and IT Manager (Al-Manna Establishment), overseeing digital systems, enterprise solutions, and technology-based operations.This strong IT foundation enables me to blend technical expertise with policy analysis and governance insights, a rare strength among legal professionals. .

I currently serve as the Managing Partner of SAFA Builders, a construction and development company. .

## Educational Qualifications

My educational background uniquely combines technology, law, and political science, providing me with analytical, technical, and legislative insight. This multidisciplinary foundation enriches my work in law, j ournalism, Politics and social justice.

I am a member of the Tamilnadu–Puducherry Bar Council, having completed my Bachelor of Law (LL.B.) at Andhra University, where I was honoured with the Dean's Award – 2018 for academic excellence.

In 2019, I completed my Master of Arts (M.A. Political Science) from the Tamil Nadu Open University, securing Second Rank at the University level and receiving the award directly from the Governor of Tamil Nadu.

In 2000, I graduated with a B.Sc. in Computer Science from Sathakathullah Appa College, Tirunelveli, passing with First Class.

In 2001, I joined the Master of Computer Applications (MCA) program at the University of Madras. I also pursued advanced computer science studies at reputed institutions such as St. Boston's Institution, Mumbai, and NIIT.

From primary to higher secondary, I completed my schooling at L.K. Higher Secondary School, Kayalpattinam, Tuticorin District. I also received foundational Islamic education at the Kayalpattinam Hamidiya Markaz.



# M.N Ahamed Sahib

**Lawyer | Journalist | Political Analyst | Social Activist | IT Professional**

## Participation in Major Public Protests

I have actively participated in key statewide and national struggles, including:

- Tamil Eelam solidarity movements
- Protests against the Jallikattu ban
- Anti-Sterlite movement
- Anti-Koodankulam Nuclear Plant protests
- Demonstrations against DCW chemical waste
- And several other major people's movements

Importantly, I have played a significant role in more than 500 protests and demonstrations, mobilising the public and delivering strong dissent speeches—especially against:

• CAA–NRC black law • Triple Talaq ban legislation • Hijab ban • Farm law amendments and many more.

## Engagement with Political Leaders

I have cordial connections with leaders across all political parties. I maintain close relations with leaders of various Islamic political parties and movements. I speak regularly on political stages across Tamil Nadu.

## Awards and Recognitions

Governor's Award in Political Science – Honored for academic excellence and critical understanding of political theory and governance.

Young Achiever Award – Conferred by the Tamilnadu Union of Journalists (TUJ) for the contributions to journalism, legal education, and social awareness through media.

Best Drafting Award in Law – Recognized for excellence in legal document preparation and advocacy precision.

**For the past 20 years, I have been involved in social service and have received many such awards at various events in recognition of my work.**



# நீங்கள் மாணவர் அல்ல என் தோழர்...

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், சமூகநீதிப் போராளி, சாதி ஒழிப்புப் போராளி, தகைசால் தமிழர் நல்லக்கண்ணு ஐயா அவர்களை சந்திக்க விரும்பினேன்.

தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கத்தின் தலைவர் தோழர் டி எஸ் ஆர் சுபாஷ் அவர்களிடம் எனது விருப்பத்தை தெரிவித்தேன்.

அதன் தொடர்ச்சியாக கடந்த அக்டோர் மாதம் சென்னையில் அவரது இல்லம் சென்று மரியாதை நிமித்தமாக சந்தித்தேன்.

ஐயா அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் 26 திசம்பர், 1925 ஆம் ஆண்டு பிறந்தார்கள். தனது 18 ஆவது வயதிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்கள்.

இரண்டாம் உலகப்போர் காரணமாக இந்தியாவிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. திருவைகுண்டம், பத்தினிக் கோட்டம் பகுதியில் சிலர் உணவு மூட்டைகளை பதுக்கி வைத்திருப்பதை அறிந்த நல்லக்கண்ணு ஐயா அவர்கள், 'ஜனசக்தி' என்ற பத்திரிகையில் அதுகுறித்து எழுதி அம்பலப்படுத்தினார்.

இதனை அரசு அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு சென்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூட்டைகளை வெளியில் கொண்டு வந்தார். இது பஞ்சத்தால் பசியில் வாடிய அப்பகுதி மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்ததன் விளைவே, 'இந்த சுத்து வட்டாரமே இன்று சாப்பிடுகிறது என்றால் அதற்கு நல்லக்கண்ணுதான் காரணம்' என்று இப்போதும் அப்பகுதியைச் சார்ந்தவர்கள் நினைவு கூர்வதுண்டு.

தொடர்ந்து தன்னை முழு நேர மக்கள் பணியாளராக அர்ப்பணித்துக் கொண்ட நல்லக்கண்ணு ஐயா அவர்கள், சுதந்திரம் கிடைத்த பிறகு கம்யூனிஸ்டுகள் மீது ஏவப்பட்ட அரச ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் தீரத்தோடு போராடினார். இதனால் அவர் உட்பட பல தலைவர்கள் மீது ஆயுதப் புரட்சியை தூண்டியதாகவும், அரசுகளை கவிழ்க்க முயன்றதாகவும் கூறி வழக்குகள் தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கடந்த 1952 ஆம் ஆண்டு இந்த வழக்கில் நல்லக்கண்ணு ஐயா உள்ளிட்ட தலைவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது ஐயா அவர்களுக்கு வயது வெறும் 27 மட்டுமே.

இவ்வாறு அரசியலின் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை, லட்சியத்தில் உறுதி எனது வாழ்ந்து வரும் நல்லகண்ணு ஐயா அவர்களின் 100-வது பிறந்தநாள் விழா கட்டுரையை எழுதுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இறை விசுவாசிகளே! நீங்கள் எப்போதும் இறைவனுக்கு அஞ்சுங்கள். மேலும் நீங்கள் உண்மை யாளர்களோடு இருங்கள்

என்கிறது குர்ஆன் (9:119).

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் என்கிறார் வள்ளுவர்.

அதாவது தமக்குரிய கடமைகளைக் கண்ணியத்துடன் ஆற்றுகின்ற சான்றோர் எல்லாக் கடல்களும் தடம்புரண்டு மாறுகின்ற ஊழிக்காலம் ஏற்பட்டாலும்கூடத், தம்நிலை மாறாத கடலாகத் திகழ்வார்கள் என்பது இதன் பொருள்.

அத்தகைய வாக்குக்கு ஒப்ப நேர்மையாகவும், கொண்ட கொள்கையில் தடம் புரளாமலும் உயர்ந்து நிற்கும் நல்லக்கண்ணு ஐயா அவர்களை நான் நேரில் சந்தித்தபோது, ஐயா..!! அரசியல் அரங்கில் பயணிக்கும் எங்களைப் போன்ற இளைஞர் சமூகத்திற்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன? என்று கேட்டேன், அதற்கு ஐயா அவர்கள், பாஜக, RSS, சனாதன சக்திகள் ஆட்சிக் கட்டிலில் ஒருபோதும் இருக்கக் கூடாது. மேலும் ஜனநாயகத்தை விரும்பும் தோழமைகளான நம்மிடையே பிளவு இருக்கக் கூடாது. அனைவரையும் நம்மோடு இணைத்திட பாடுபட வேண்டும் என்று கொஞ்சம்கூட தாமதிக்காமல் பதிலளித்தார்.

தென் தமிழகத்தில் தான் மேற்கொண்ட சமூகநீதிக் களங்கள் குறித்து நினைவு கூர்ந்தார். குறிப்பாக தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளம், உடன்குடி, நாசரேத் மற்றும் காயல்பட்டினம் ஆகிய ஊர்களின் சிறப்புகள் குறித்தும், கடந்த கால வரலாற்று நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்தார்.

இறுதியில் எனக்கும் அவர் பொன்னாடை அணிவிக்க வேண்டும் என்று விரும்பினார். ஒரு மூத்த ஆசிரியராக இருக்கும் நீங்கள் அரசியலில் மாணவர் பருவத்தில் இருக்கும் எனக்கு பொன்னாடை அணிவிப்பது மிகையாக இருக்கும் ஐயா என்று கூறினேன். அதற்கு ஐயா "நீங்கள் மாணவர் அல்ல என் தோழர்" என்று நெகிழ்ச்சியோடு கூறினார்கள். ஐயாவின் 80 ஆவது பிறந்த நாளின் போது, ஒரு கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. அதை அந்த மேடையில் வைத்து கட்சிக்கே திருப்பிக் கொடுத்து விட்டார் ஐயா.

நல்லக்கண்ணு ஐயா அவர்களுக்கு தமிழக அரசு அம்பேத்கர் விருது கொடுத்த போது, ஒரு இலட்சம் ரூபாயை வழங்கியது. அதில் பாதியைக் கட்சிக்கும், மீதியை விவசாயத் தொழிலாளர் சங்கத்துக்கும் கொடுத்து விட்டார்.

இத்தகைய நற்குணங்களுக்கு சொந்தக்காரனான நல்லகண்ணு ஐயா அவர்கள் நற்சுத்தோடு வாழிய வாழிய வாழியவே..!! என நானும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

நிகழ்வின் மகிழ்வில் தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் தோழர் D.S.R.சுபாஷ் அவர்கள், சமூகநீதிப் பேரவையின் நிர்வாகிகள் S.O அப்பாஸ், JSM புகாரி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.






# ஒரே நாடு..! ஒரே பிராடு..!!

## தீவிர சிகிச்சை பிரிவில் இந்திய ஜனநாயகம்!

பல மொழிகள், பல இனங்கள், பல மதங்கள், பல கலாச்சாரங்கள், பல பாரம்பரியங்கள் என உலகின் மிகுந்த சமூக வேறுபாடுகள் கொண்ட மக்கள் வாழும் நாடு இந்தியா. மொழி, உணவு, உடை, மரபு, பழக்கவழக்கம் போன்றவற்றில் நம்மிடையே பல்வேறு வேற்றுமைகள் இருப்பினும், வேற்றுமையில் ஒற்றுமை கண்டு சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருவது இந்தியாவின் சிறப்பு.

தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளி, மராத்தியர், குஜராத்தி, கொங்கனி, பஞ்சாபி, சிந்தி, காஷ்மீரி, அஸ்ஸாமி, வங்காளி, போடோ, சிக்கிம், மணிப்பூரி போன்ற நூற்றுக்கணக்கான இன, மொழி, மரபுவழி சமூகங்கள், இந்தியா என்ற ஒரே குடையின் கீழ் இணைந்து வாழ்கின்றனர்.

இந்து, முஸ்லிம், கிருஸ்துவர், சீக்கியர், பௌத்தர், பார்சி உள்ளிட்ட மதங்களும் நம் நாட்டில் உள்ளன. இருப்பினும், ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு ஒற்றுமையுடன் வளர்ந்து வரும் அரிதான நாடும் இந்தியாதான்.

இந்நிலையில்தான் நாட்டில் கடந்த 11 ஆண்டுகளாக 'ஒரே ஒரே ஒரே' என்ற ஒரேயொரு கூப்பாடு ஒரேயடியாக ஒலிக்கிறது. ஒன்றிய பாஜக அரசின் அதிதீவிர பிரச்சாரமான ஒரே நாடு ஒரே தேர்தல். ஒரே நாடு ஒரே வரி (ஜிஎஸ்டி). ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை. ஒரே நாடு ஒரே சந்தை. ஒரே நாடு ஒரே சிவில் சட்டம். ஒரே குடியுரிமை பதிவேடு. ஒரே நாடு ஒரே மின்கம்பி இணைப்பு. ஒரே நாடு ஒரே பாஸ்டேக் (டோல் கட்டணம்). ஒரே நாடு ஒரே உரம் என்று இந்தப் பட்டியல் நீளுகிறது.

ஒரே நாடு ஒரே சுடுகாடு, ஒரே நாடு ஒரே மதம், ஒரே நாடு ஒரே ஜாதி, ஒரே நாடு ஒரே உணவு, ஒரே நாடு ஒரேயொரு மொழி என்றும் சொல்லலாம் அல்லவா? இத்தகைய சொல்லாடலிலும் ஒரே ஒரே என்று வருகிறதே பாஜக இவற்றை பரிசீலிக்குமா?

பிரான்ஸ் நாட்டில் வாங்கப்பட்ட ரபேல் போர் விமானத்தில் ஊழல் செய்து விட்டு, இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டம் - மேக் இன் இந்தியா

என்றனர். மாட்டிறைச்சிக்காக தலித்களை, இஸ்லாமியரை அடித்துக் கொன்று விட்டு, ஒரே இந்தியா சிறந்த இந்தியா (ஏக் பாரத் சிரஸ்தா பாரத்) என்றனர். தலைநகர் டெல்லியின் காற்று மாசு புகையில் நின்று கொண்டு, சுத்தமான இந்தியா (சுவச் பாரத்) என்கின்றனர்.

நாட்டில் 26 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் நிலையில், சுய நிறைவு இந்தியா (ஆத்ம நிர்ம பாரத்) என்கின்றனர். அமெரிக்க டாலருக்கு நிகராக இந்தியப் பணத்தின் மதிப்பு சுமார் 90 ரூபாய் என வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், டிஜிட்டல் இந்தியா என்ற பீற்றல் வேறு.

இவை எல்லாம் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பழைய தேர்தல் பிரச்சாரங்கள் என்று எண்ணி விடாதீர்கள். மாறாக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நடந்த பீகார் தேர்தல் பிரச்சாரங்களின் போது பேசியவைதான் இவை.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரால் பீகார் மாநிலத்தை ரணகளமாக்கி, 65 லட்சம் பீகாரிகளின் வாக்குரிமையை பறித்த பின்னர் நடத்திய தேர்தலை சட்டப்படி ஒழுங்காக நடத்தினார்களா? இல்லையே. வாக்குப் பதிவின்போது பல தொகுதிகளில் திடீரென்று மின்னணு வாக்கு இயந்திரங்கள் (ஈவிஎம்) வேலை செய்யவில்லை. மாற்றிக் கொண்டு வரப்பட்ட இயந்திரங்களில் முறையான சீல் இடப்படவில்லை. இது தேர்தல் விதிமுறை மீறல் என்று எதிர்கட்சிகள் தேர்தல் ஆணையரிடம் முறையிட்டும் எந்தப் பலனும் இல்லை.

ஹில்சா போன்ற பல தொகுதிகளில் வெற்றி வாய்ப்பில் இருந்த இந்தியா கூட்டணி வேட்பாளர்களை விட, இறுதி சுற்றில் பாஜக கூட்டணி வேட்பாளர்கள் திடீரென சொற்ப வாக்குகளில் முன்னணி பெற்றபோது சந்தேகப்பட்ட எதிர்கட்சிகள், மறு கூட்டல் செய்யும்படி வலியுறுத்தினர். தேர்தல் அதிகாரிகள் கோரிக்கையை கண்டுகொள்ளவே வில்லை. மாறாக பல தொகுதிகளில் பதிவான ஆயிரக்கணக்கான தபால் ஓட்டுக்களை செல்லாது என்று போகிற போக்கில் அறிவித்தனர்.

பர்பட்டா, சாசாராம், கோஹ் போன்ற தொகுதிகளில் வாக்களிப்பதற்கு உரிய ஆவணங்களோடு சென்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருப்பி அனுப்பப் பட்டனர்.

**“இரவில் பிரதமர் மோடி தொலைக்காட்சியில் திடீரெனத் தோன்றி 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார்.”**



சிதாமர்ஹி தொகுதியில் வாக்களிக்கச் சென்ற வாக்காளர்கள் ஆயுதம் ஏந்திய குண்டர்களால் விரட்டி அடிக்கப்பட்டனர்.

மாநிலம் எங்கும் அனைத்து தொகுதிகளிலும் பாஜக கூட்டணியினர் பெரும் பணப்பட்டுவாடா செய்தனர். இவ்வாறு அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி, வாக்காளர் பட்டியலில் மாற்றம் செய்து, லஞ்சம் கொடுத்து, மதவெறி பிரச்சாரம் செய்து, மக்களை அச்சுறுத்தி, போலி வாக்குகள் மூலம் பீகாரின் ஆட்சி பீடத்தை பாஜக கைப்பற்றியுள்ளது. இதே பாணியை பின்பற்றி அடுத்தது மேற்கு வங்கமாம், அதற்கு அடுத்ததாக தமிழ்நாடாம்!

கடந்த 11 ஆண்டுகளாக பாஜக ஆட்சி இந்திய மக்களுக்கு தந்த நன்மைகள் என்ன? கடந்த 2014 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு நல்ல காலம் பிறக்கப் போகிறது என்ற பரப்புரை மூலம் பிரதமர் மோடி ஆட்சியைப் பிடித்தார்.

பிரதமர் மோடியின் ஆட்சியில், இதுவரை நடந்த தவறுகள், ஊழல்கள் பொய்ப் பிரச்சாரங்கள், ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகளை சொல்லி மாளாது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் ஹிண்டன்பர்க் நிறுவனம் வெளியிட்ட அறிக்கை மூலம் இந்தியாவை ஆளுவது பிரதமர் மோடி மட்டுமல்ல, கூடவே அதானி, அம்பானி போன்ற கார்ப்பரேட்டுகளும்தான் என்பது உறுதியானது.

சிபிஐ, ஈடி, ஐடி போன்ற நாட்டின் பொது நிறுவனங்கள் குற்றத்தை கண்காணிப்பதற்கு அல்ல. மாறாக எதிர்க்கட்சிகளை கட்டுப்படுத்தும் கருவியாக அவை மாறின.

ஊழல் வழக்குகளில் 95 சதவிகிதம் பிஜேபி அல்லாதவர்கள் மீதுதான் பதியப்பட்டது. அவர்களில் சிலர் பாஜகவில் சேர்ந்தவுடன் அந்த வழக்குகள் மாயமாக போனது. இது எப்படிப்பட்ட பிராடுத்தனம் என்பதை சிந்திப்பீர்.

கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி, இரவில் பிரதமர் மோடி தொலைக்காட்சியில் திடீரெனத் தோன்றி 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். 50 நாட்களில் தனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும், கருப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வருவேன் என்றும் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

99 சதவிகித பழைய நோட்டுகள் மீண்டும் வங்கிகளில் வரவு வைக்கப்பட்டன. பண மதிப்பு இழப்பு நடவடிக்கையால் சிறு, குறு வியாபாரம்

நாட்டில் சரிந்து விழுந்தது. சுமார் ஒன்றரை கோடி மக்கள் தங்கள் வேலையை இழந்தனர்.

ஒன்பது ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை ஒரு பைசா கறுப்புப் பணத்தைகூட மோடிஜி மீட்கவில்லை. 15 லட்சம் ரூபாய் நமது வங்கிக் கணக்கில் வந்தபாடில்லை. அதிதீவிர வேகத்தில் பாஜக அரசு நடைமுறைப்படுத்திய ஜி.எஸ்.டி வரி விதிப்பால் நாட்டின் வியாபாரிகளின் முதுகு முறிந்ததுதான் மிச்சம். இது மக்களை ஏமாற்றிய பிராடுத்தனம் இல்லாமல் வேறென்ன?

கடந்த 2020 - 2021 ஆண்டு விவசாய திருத்தச் சட்டம் என்ற பெயரில் கார்ப்பரேட்டுகளுக்கு விவசாயத்தை தாரைவார்க்க ஒன்றிய பாஜக அரசு முயற்சித்தது. இந்திய விவசாயிகளின் ஒரு வருட தொடர் போராட்டத்திற்குப் பிறகு இந்தச் சட்டம் வாபஸ் வாங்கப்பட்டது.

சி.ஏ.ஏ, என்.ஆர்.சி, லவ் ஜிஹாத், புல் டவுசர் பாலிடிக்ஸ் இவை அனைத்தும் மக்கள் கவனத்தை உண்மையான பிரச்சினைகளிலிருந்து திருப்பி பிராடுத்தனம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகும். பாஜக அரசை விமர்சனம் செய்பவர்கள் மீது காவல்துறை ஏவப்படுகிறது.

தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சி கேள்விக்குறி ஆகிவிட்டது. நீதித்துறையில் தேர்வு குழு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் பலவீனப்படுத்தப்பட்டு விட்டது. பெகாசஸ் உளவு கண்காணிப்பு விவகாரம் இந்திய குடிமக்களின் தனி உரிமை மீறலுக்கான மிகப்பெரிய சான்று. ஒன்றிய அமைச்சர்கள் அலங்கார பொம்மைகளாக உள்ளனர். அனைத்து முடிவுகளும் ஒரே நபரின் கையில் சிக்கி விட்டது.

நாடாளுமன்றத்தில் விவாதங்கள் இன்றி சட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன. இது பிராடுத்தனத்தின் உச்சம்!. கொரோனா பெருந்தொற்றில் சுவாசிக்க ஆக்சிஜன் இல்லாமல் மக்கள் இறந்ததைப் போல, நாட்டில் ஜனநாயகம் தீவிர சிகிச்சை பிரிவில் கிடத்தப்பட்டு மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கிறது.

இந்த லட்சனத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதில் துளியும் உண்மை உள்ளதா? கடந்த 11 ஆண்டுகால பாஜக ஆட்சியை எடைபோடும்போது எங்கும் பிராடுத்தனம், எதிலும் பித்தலாட்டம் என்றே உள்ளது. 'ஒரே நாடு..! ஒரே பிராடு..!!' என்ற கோஷம் ரைமிங்காகவும் உள்ளதால், இனி ஒரே நாடு என்று சொன்னதுமே, ஒரே பிராடு என்றுதான் மக்கள் கூறுவர்.



> “ஒன்பது ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை ஒரு பைசா கறுப்புப் பணத்தைகூட மோடிஜி மீட்கவில்லை.”

இந்த பிராடுகளுக்கு மத்தியில்தான் இந்திய தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர் என்ற பெயரால் குடியுரிமைச் சட்டத்தை மறைமுகமாக பரிசோதனை செய்கிறது. தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பெரும் குழப்பத்தையும், சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 10 சதவிகிதம் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டாலோ, அல்லது அவர்கள் விண்ணப்பிக்க தவறினாலோ சுமார் 65 லட்சம் வாக்காளர்களை தமிழ்நாடு இழக்கும் சூழல் உள்ளது. எஸ்.ஐ.ஆர் மூலம் உண்மையான வாக்காளர்கள் தவறாக நீக்கப்படும் அபாயத்தை கண்கூடாகக் காண்கிறோம்.

குறிப்பாக சிறுபான்மையினர், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள், முதியவர்கள் போன்றோரின் பெயர்கள் பட்டியலில் காணாமல் போகுமோ என்ற அச்சம் எழுகிறது. ஆன்லைன் விண்ணப்பம் செய்வது பொதுமக்களுக்குத் தெரியவில்லை. கிராமப்புரங்களில் எஸ்.ஐ.ஆர் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தகவல் பரவல் மிகக் குறைவாகவே உள்ளது.

வீடுதேடி வருவதாகக் கூறப்பட்ட பி.எல்.ஓக்கள் எனும் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் வாக்காளர்களை நேரில் சென்று சந்திக்க வில்லை. காகிதத்தில் மட்டுமே பதிவு செய்துதரும் ஒப்புகை சீட்டுகளை மக்களே பாதுகாக்கும் நிலை உள்ளது. பி.எல்.ஓக்களுக்கு போதிய பயிற்சியின்மை, நெருக்கடியான காலக்கெடு, மன அழுத்தத்தால் பி.எல்.ஓக்கள் தற்கொலை செய்கின்றனர்.

இவ்வாறு எஸ்.ஐ.ஆர் செயல்முறை நம்பிக்கையற்றதாக மாற்றியுள்ளது. எனவே, தற்போதைய எஸ்.ஐ.ஆர் செயல்முறையை உடனடியாக நிறுத்திட வேண்டும். என்பதுதான் மக்களின் கோரிக்கை.

வாக்காளர் பட்டியல் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை. முழு கண்காணிப்பு, ஆய்வு, மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடைய வெளிப்படையான முறையில் மட்டுமே வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியதேர்தல் ஆணையம் வெளிப்படைத்தன்மை இல்லாமல், அவசரமாகவும், அடிப்படைத் தகவல்கள் இல்லாமலும் எஸ்.ஐ.ஆர் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.



# தொகுதி மறுவரையறை!
# அவசரமா? அவசியமா?



தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் முஸ்லிம்களின் இஃப்தார் எனும் நோன்பு துறப்பு நிகழ்வுகளில் பங்கெடுக்கும் காட்சி மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக கடந்த 21 வருடங்களாக விசிக தலைவர் எழுச்சித்தமிழர் திருமாவளவன் அவர்கள் ரமழான் நோன்பு நோற்கிறார்.

இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார், தாவெக தலைவர் விஜய் உள்ளிட்ட பல்வேறு அரசியல் தலைவர்களும் இஃப்தார் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றனர்.

தமிழகம் என்றுமே சகோதரத்துவமும் மதசகிப்புத் தன்மையும் கொண்ட அமைதிப் பூங்காதான் என்பதை இத்தகைய நோன்பு துறப்பு (இஃப்தார்) நிகழ்வுகள் உணர்த்துகிறது. அனைவருக்கும் நன்றிகளும், புரட்சிகர வாழ்த்துக்களும்.

தமிழ்நாடு மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியாவின் நிலையும் இதுதான். இதுதான் இறையாண்மையும் சமதர்மமும் வாய்ந்த, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு என்ற நம் முன்னோர்கள் கனவு கண்ட இந்தியா.

அத்தகைய ஒற்றுமை உணர்வில் பங்கம் விளைவிப்பது போல, ஒன்றிய பாஜக அரசு முன்மொழியும் வக்ஃபு வாரியத் திருத்தச் சட்டம், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டம் போன்றவை தேவைதானா?

**"தற்போது 39 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட தமிழ்நாடு மறுவரையறைக்குப் பின்னர் எட்டு தொகுதிகளை இழக்க நேரிடும்."**



என்ற கேள்வி எழுகிறது.

மறுபுறம் புதிய தேசியக் கல்விக் கொள்கை என்று வரையறுத்து, மும்மொழிக் கொள்கையை நிறுவி, அதன் மூலம் இந்திமொழி பேசப்படாத மாநிலங்களில் இந்தி மொழியைத் திணிக்க முயல்கிறது ஒன்றிய அரசு.

குறிப்பாக ஒன்றிய பாஜக அரசின் முன்மொழிக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக் கொண்டால்தான் சுமார் 2150 கோடி ரூபாய் கல்விக்கான நிதியை தருவார்களாம்.

மேலும் வெந்த புண்ணில் வேல் பாய்ந்த கதையாக நாடாளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்ய உள்ளோம் என்றும் ஒன்றிய பாஜக அரசு அறிவித்துள்ளது.

மக்கள் தொகை எண்ணிக்கை சதவிகித அடிப்படையில் தொகுதிகளை மறுவரையறை செய்தால் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட தென் இந்திய மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையும்.

அதே வேளையில் பசு வளைய (கவ் பெல்ட்) மாநிலங்களாகக் கருதப்படும் உத்தரபிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருமளவு உயரும்.

தற்போது 39 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட தமிழ்நாடு மறுவரையறைக்குப் பின்னர் எட்டு தொகுதிகளை இழக்க நேரிடும்.

இந்திய அரசின் குடும்ப கட்டுப்பாட்டு திட்டத்தை கடந்த பல ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்படுத்தி, மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அளிக்கும் தண்டனையா இது? என தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பினார். மக்கள் தொகை எண்ணிக்கை சதவிகிதத்தை வைத்து நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரை செய்ய வேண்டுமெனில் நாடளவில் முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

பிறகு பெருகி வரும் இந்திய மக்கள் தொகையானது மாநிலங்கள் தோறும் அதன் விகிதாச்சார ஒப்பீட்டளவில் சமநிலையை அடைந்துள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

இதை கருத்தில் கொண்டே கடந்த 1976 ஆம் ஆண்டு பிரதமர் இந்திரா காந்தி அவர்களும், கடந்த 2001 ஆம் ஆண்டு பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களும் 25 ஆண்டுகளுக்கு மறுவரையறையை தள்ளிப் போட்டனர்.

இப்போது என்ன அதீத வேட்கை? என்ன அவசரம்? நூற்றாண்டுகளைக் கடந்தும் அமெரிக்க நாட்டின் நாடாளுமன்றத் தொகுதி எண்ணிக்கையில் எந்தக் குழப்பங்களும் இல்லையே!

இந்நிலையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள், 'புரோ ரேட்டா' அடிப்படையில் தொகுதி மறுவரை செய்ய உள்ளோம். இதனால் தமிழ்நாட்டுக்கு ஒரு தொகுதி கூட குறையாது என்று வாக்குறுதி தருகிறார்.

ஒரு ஜோடி புரோட்டா இருந்தால் எங்கள் பசி ஆறிவிடும் என்ற நிலையில் பல கோடி ஏழைகள் வாழும் நாடு இந்தியா. சங்கித்துவத்தைவிட சாப்பாடுதான் முக்கியம்.



> எங்களுக்கு உள்ள அளவைவிட அதிக நாடாளுமன்றத் தொகுதிகளை ஒதுக்கித் தர வேண்டும் என்று கோருவதே நியாயம்.



எனவே முதலில் ஏழைகளின் பசியைப் போக்கிட திரு அமித்ஷா தீர்வைச் சொல்லட்டும். பணமதிப்பிழப்பு மூலம் கறுப்புப் பணத்தை மீட்டித் தந்த மோடிஜியின் வாக்குறுதியை பார்த்தோமே.

அது என்ன புரோ ரேட்டா? கல்வி, மருத்துவம், தொழில்துறை ஆகிய துறைகளில் முன்னோடிகள் நாம். இந்தியாவின் வளர்ச்சியில் (ஜிடிபி) பெரும் பங்கெடுத்து வரி செலுத்தும் முதன்மை மாநிலம் தமிழ்நாடு. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதும் நாம்தான்.

எனவே இவற்றை பாராட்டி எங்களுக்கு உள்ள அளவைவிட அதிக நாடாளுமன்றத் தொகுதிகளை ஒதுக்கித் தர வேண்டும் என்று கோருவதே நியாயம். இவ்வாறு நியாயத்தை பேசும் நம்மை நகர்புற நக்சல்கள் என்று கோடிமீடியாக்கள் விமர்சிப்பது ஏனோ?

இது ஒருபுறம் இருக்கட்டும், இஸ்லாமியர்கள் அடர்த்தியாக வாழும் காஷ்மீர் மாநிலத்தின் தோடா மாவட்டத்தின் தொகுதிகளை கடந்த 2022 ஆம் ஆண்டு எந்த லட்சணத்தில் மறுவரையறை செய்தார்கள் என்பது நமக்குத் தெரியாதா? கடந்த 2023 இல் அஸ்ஸாம் மாநிலத்தில், மறுவரையறை ஆணையமும், பாஜகவும் திட்டமிட்டு நடத்திய முறைகேடுகளால் அங்குள்ள முஸ்லிம்கள், மலைவால் மக்கள் அதிகாரத்திற்கு வரக்கூடாது என்ற எண்ணத்தில் தொகுதிகளை பிரித்ததாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில்?

குறிப்பிட்ட அளவுகோலை வைத்து புரோரேட்டா எனும் விகிதாச்சார அடிப்படையில் மறுவரையறை செய்ய முடியுமாம். அப்படி வரையறை செய்தாலும் புதிதாக அமையும் அத்தொகுதிகளில், பட்டியலின சமூகம் மற்றும் பெண்களுக்கான தனித் (ரிசர்வ்) தொகுதிகளின் நிலை என்ன?. இது குறித்து அனைத்து கட்சித் தலைவர்களோடும், மறுவரையறை துறை சார்ந்த நிபுணர்களோடும் ஒன்றிய அரசு இதுவரை ஒரு கலந்தாய்வு கூட்டத்தையாவது நடத்தியது உண்டா?

பிரதமர் மோடியின் அன்புச் சகோதரியும், உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதியும், உத்தரகாண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பொதுச்சிவில் சட்ட வரைவை தயாரித்தவருமான திருமதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் போன்றவர்கள் தொகுதி மறுவரையறை ஆணையத்தில் முக்கியப் பங்காற்றும் போது நாட்டு மக்களுக்கு எத்தகைய நியாயமான தீர்வுகள் கிடைக்கும்? என்பது மில்லியன் டாலர் கேள்வி!

இவற்றை உள்வாங்கிய நிலையில்தான், தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் சர்வ கட்சிகளையும் ஒருங்கிணைத்தார். அதன் காரணமாக ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறையை எதிர்த்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மோடி சர்க்கார் அதி தீவிரம் காட்டும் மேற்படி தொகுதி மறுவரையறை நாட்டுக்கு அவசரமா? அல்லது அவசியமா? என அனைவரும் வினா எழுப்புகின்றனர். நாடளவில் இதுகுறித்த கூட்டு நடவடிக்கை தேவை என்று பிற மாநில முதல்வர்களுக்கு நம் முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

நியாயமான தொகுதி மறுவரையறை வேண்டி தமிழக முதல்வர் முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மனதார வரவேற்கிறது. ஒன்றுபட்டு ஒருமித்த குரலில் தமிழகம் திரண்டு எழுந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.

# தமிழ் திசை நாளிதழ் வெளியீட்டு விழா!










தமிழ் திசை நாளிதழ் வெளியீட்டு விழா கடந்த 22-09-2025 அன்று மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பூனாவில் சிறப்பாக நடைபெற்றது.

வெகுஜன மக்களின் நம்பிக்கை நாயகரும், டாக்டர் BR அம்பேத்கர் அவர்களின் பேரருமான பாலா சாகேப் பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் சிறப்புரையாற்றி “தமிழ் திசை” நாளிதழின் முதல் பிரதியை வெளியிட அதை பெற்றுக் கொண்ட போது...





# கலவரம் தடுப்போம் கருத்தியல் படைப்போம்!

## கல்லறை அரசியல் அடியோடு தவிர்ப்போம்!!

இறைவனைப் புகழ்ந்து, எளியோருக்கு உணவளித்து, சமய நல்லிணக்கம் பேணி, சகோதரத்துவம் நிலைத்திட, சமூக ஒற்றுமை தழைத்தோங்க சூளுரைக்கும் ரம்ஜான் என்னும் ஈகைப் பெருநாள் வந்து விட்டது. ஒரு மாத காலம் நோன்பிருந்து உலக அமைதிக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் இனிய ரம்ஜான் நல்வாழ்த்துக்கள்.

உலக அளவில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட வேண்டும் என்பதே நம் அனைவரின் விருப்பம். இருப்பினும் மனிதப் படுகொலைகளும், குண்டு வீச்சுகளும் முடிந்த பாடில்லை. மனித உயிர்களின் மதிப்பு மலிவாகி விட்டது. சல்லடையாகி விட்ட பாலஸ்தீனம் காஸா இதற்கு ஓர் உதாரணம்.

காஸாவாசிகள் இனி இழப்பதற்கு ஏதுமில்லை. காத்திருந்து கையேந்தும் அவர்களின் உணவுத் தட்டில்கூட இஸ்ரேலின் ஏவுகணைகளே வந்து விழுகின்றன. சர்வதேச சட்டங்களும், ஒழுங்கு முறைகளும் சந்து பொந்துக்குள் பதுங்கி பல் இளிக்கிறது.

நமது தமிழ்நாட்டிலோ கபடி விளையாடிய பள்ளி மாணவரின் கைகள் வெட்டப் படுகிறது. புல்லட் ஓட்டினால்கூட கை வெட்டு என்ற முடிவுக்கு வராத ஆணவங்கள். வக்ஃபு சொத்துகளை மீட்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டதால் ஓய்வு பெற்ற காவலர் நெல்லையில் படுகொலை.

அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டின் நிலையே இதுவென்றால் நாக்பூரின் நிலையை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

முகலாய மன்னர் அவுரங்கசீப் அவர்களின் கல்லறையை அகற்றக்கோரி வி.எச்.பி, பஜ்ரங்தளம் உள்ளிட்ட சங்பரிவார அமைப்புகள் கடந்த 17-03-2025 அன்று மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அந்த ஆர்ப்பாட்டத்தில் முகலாய மன்னர் அவுரங்கசீப்பின் உருவப்படம் எரிக்கப்பட்டது. திருமறை குர்ஆன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட போர்வைகள் தீயிட்டு கொளுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக் களம் கலவரக் களமாக மாறியது. எங்கும் கல்வீச்சு, தீயெரிப்பு அதனால் 144 தடை உத்தரவு. நூற்றுக் கணக்கானோர் கைது.

நாக்பூரைச் சுற்றி காவல்துறை! காரணம் மராட்டிய திரைப்பட தயாரிப்பாளர் லச்சுமண் உடேகர் ‘சாவா’ (Chhaava) என்ற பெயரில் ஒரு



திரைப்படத்தை தயாரித்து வெளியிட்டார். அப்படத்தில் மராட்டியத்தை ஆண்ட ராஜா சத்ரபதி சம்பாஜி அவர்களை முகலாய மன்னர் அவுரங்கசீப் கொடூரமாகக் கொலை செய்ததாக காட்சி படுத்தப்பட்டன. அதுதான் கலவரத்திற்கான அச்சாரம்.

‘சாவா’ என்ற பெயரில் ஒரு திரைப்படத்தை தயாரித்து வெளியிட்டார். அப்படத்தில் மராட்டியத்தை ஆண்ட ராஜா சத்ரபதி சம்பாஜி அவர்களை முகலாய மன்னர் அவுரங்கசீப் கொடூரமாகக் கொலை செய்ததாக காட்சி படுத்தப்பட்டன. அதுதான் கலவரத்திற்கான அச்சாரம்.

முகலாயப் பேரரசரான அவுரங்கசீப் (ஔரங்கசீப்) இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும் பகுதியை சுமார் அரை நூற்றாண்டு காலம் ஆட்சி செய்தவர். அவர் 03-03-1707இல் மரணமடைந்தார். மகாராஷ்டிராவின் ஔரங்காபாத் மாவட்டத்தில் உள்ள குல்தாபாத்தில் அவரது அடக்கத்தளம் அமைந்துள்ளது. அவுரங்கசீப் விருப்பப்படி, அவரது ‘ஆன்மீக ஆசிரியரான’ ஸூஃபி ஷேக் ஜைனுதீன் தர்காவிற்கு அருகில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

நம்முடைய கேள்வி, அவுரங்கசீப்பின் கல்லறையை அங்கிருந்து ஏன் அகற்ற வேண்டும்? அப்படி அகற்றி விட்டால் இந்தியப் பொருளாதாரம் சீர் பெறுமா? இந்தியா வல்லரசாகி விடுமா? கருப்புப் பணம் அனைத்தும் மீட்கப்படுமா? நீரோ மோடி, லலித் மோடி, விஜய் மல்லையாக்கள் கொள்ளை அடித்த பணம் திரும்பப் பெறப்படுமா? நாட்டில் நிலவும் வேலையில்லா திண்டாட்டம் தீர்ந்து விடுமா? விவசாயம் செழிக்குமா? ஊழல் இல்லாத இந்தியா உருவாகுமா? பதில் என்ன?

முஸ்லிம்கள் கடைபிடிக்கும் புனித ரமழான் நோன்புக்கு மத்தியில் அவுரங்கசீப்பின் கல்லறையை சர்ச்சையாக்கி கலவரம் செய்ததின் நோக்கம் என்ன? மதுரை சிக்கந்தர் தர்காவைப் போல, நாக்பூரில் அவுரங்கசீப் தர்காவா?

முஸ்லிம் தர்காக்கள் மீது பாஜகவினருக்கு ஏன் இந்த அதீத வேட்கையோ? கடந்த காலங்களில் நெல்லி, பாகல்பூர், மீரட், மொராதாபாத், பீவண்டி, குஜராத், பம்பாய், டெல்லி உள்ளிட்ட நகரங்களில் ஆர். எஸ். எஸ், சங்பரிவார் ஏற்படுத்திய கலவரங்களைப் போல



நாக்பூரிலும் நடைபெற்று மனித உயிர்கள் பலியாகக் கூடாது என்றே பிராத்திக்கிறோம். முகலாய மன்னர்களிலேயே இஸ்லாமிய மார்க்கத்தை தனது சுய வாழ்வில் பேணி பின்பற்றியவர் மன்னர் அவுரங்கசீப்.

அவர் ஆளுமையின் கீழ் இருந்த பல கோயில்களுக்கு மானியங்களை வழங்கி மத சகிப்புத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர். அந்தப்புரங்களை வைத்துக் கொள்ளாத ஒழுக்கசீலர். எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். அரசு கருவூலத்தில் குவிந்த நிதியை தனக்காக பயன்படுத்தாதவர்.

தனது கையால் எழுதப்பட்ட குர்ஆன் பிரதிகளை விற்று தனக்கான பொருளாதாரத் தேவையை பூர்த்தி செய்து கொண்டவர்.

இதுதான் அவரது உண்மை வரலாறு. இந்த உண்மை வரலாற்றை மறைத்து மராட்டிய மன்னர்களுக்கு எதிரிதான் அவுரங்கசீப் திட்டமிட்டு பரப்பியதின் விளைவுதான் இன்றைய நாக்பூர் கலவரம்.

மன்னர் அவுரங்கசீப் இந்துக்களுக்கு எதிரான சிந்தனை உடையவராக இருந்திருந்தால் ராஜா ஜெய்சிங், மகாராஜா ஜஸ்வந்த் சிங், ராணா ராஜ்சிங் போன்ற இந்து மன்னர்கள் அவருக்கு பக்கபலமாக, உற்ற துணையாக எப்படி இருந்து இருப்பார்கள்?. சிந்திக்க வேண்டாமா?

என AMASR Act 1958 பண்டைய நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் தளங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் நமது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது ஏன்? பழங்கால நினைவுச் சின்னங்கள், தொல்லியல் தளங்களை பாதுகாக்கவும், அகழ்வாராய்ச்சிகளை ஒழுங்குபடுத்தவுமே உருவாக்கப்பட்டது.

முகலாய மன்னர் அவுரங்கசீப் அவர்களின் மண்ணறையும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் இடம்தானே? இதை நன்கு புரிந்து கொண்டதால்தான் மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் இதில் உரிய சட்டத் திருத்தம் தேவை என்கின்றனர்.

சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபு ஆஸ்மி அவர்கள் அவுரங்கசீப்பை புகழ்ந்து பேசியதால்தான் சர்ச்சை எழுந்தது என்பது மாநில காவல்துறையின் கூற்று.

அவுரங்காபாத் நகர பிரமுகரும் சிறுபான்மை ஜனநாயகக் கட்சித் தலைவருமான ஃபஹிம்கான் என்பவர் கலவரம் செய்தோர் குறித்த உரிய தரவுகளோடு காவல்துறையில் புகார் அளித்தார்.

மனு அளிக்கச் சென்றவரையே குற்றவாளியாக்கி அவர் மீதும் வழக்கு புனைந்துள்ளது நாக்பூர் காவல்துறை.

இந்நிலையில் ரிபப்ளிக் டிவி, டைம்ஸ் நவ் உள்ளிட்ட சில தேசிய பாசிச ஊடகங்கள், நாக்பூர் கலவரத்தை ஊக்குவிக்கும் வகையிலும், செய்திகளை திரித்தும், வன்முறை பேச்சுக்களையும் தொடர்ந்து வெளியிட்டன.

அத்தகைய ஜனநாயக விரோத போக்குகளை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எதிர்கால இந்தியாவுக்கு ஏற்றம் தருவது கலவரங்களோ, மத அடிப்படை வாதங்களோ அல்ல. பாசிசவாதிகளின் கலவரத் திட்டங்களை முறியடித்து நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது ஒன்றிய, மாநில அரசுகளின் கடமை ஆகும்.

அந்தக் கடமையை அரசு நிறைவேற்றத் தவறினால், நம் இந்தியத் திருநாட்டின் சமய நல்லிணக்கம் சீர்கெடும், சகோதரத்துவம் பாழ்படும், சமூக ஒற்றுமை கேள்விக் குறியாகும்.

எனவே பாசிசம் விரும்பும் கலவரங்களைத் தடுப்போம். ஜனநாயகக் கருத்தியல் படைப்போம். கல்லறை அரசியல் அராஜகங்களை அடியோடு தவிர்ப்போம்.







# தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கத்தின்
# 22 – வது மாநில மாநாடு!






தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கத்தின் 22-வது மாநில மாநாடு சங்கத்தின் தலைவர் DSR சுபாஷ் அவர்கள் தலைமையில் தஞ்சாவூரில் 15-09-2024 இல் நடைபெற்றது.

ஐயா பழ.நெடுமாறன், எழுச்சித் தமிழர் தலைவர் திருமா உள்ளிட்ட இந்திய அரசியல் ஆளுமைகள், பல்வேறு மாநிலங்களின் பத்திரிக்கை சங்கங்களின் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். மலேசியா, சிங்கப்பூர், துபாய், அந்தமான், கம்போடியா, இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் மூத்த பத்திரிக்கையாளர்கள் வருகை தந்தனர்.

இந்த மாநாட்டில் தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கத்தின் சார்பில் எழுச்சித் தமிழர் தலைவர் திருமா அவர்களின் கரங்களால் “இளம் சாதனையாளர்” என்ற விருது எனக்கு வழங்கப்பட்டது.

---

ஜெத்தா முத்தமிழ்ச் சங்கம்

JeMS

சவுதி அரேபியா ஜித்தா மாநகரில்,
கடந்த 06122025 அன்று
**ஜித்தா முத்தமிழ்ச் சங்கம்** நடத்திய
**அறிவு மேடை நிகழ்ச்சியில்**
இப்புத்தகம் வெளியிடப்பட்டது.




# மனிதம் மாய்க்கும் மதவெறியும், பல்லாண்டு பகையும் ! பாகிஸ்தான் போர் தேவைதானா?



ஒன்றிய பாஜக அரசின் புதிய வக்ஃபு வாரிய திருத்தச் சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என இந்தியா கூட்டணிக் கட்சிகள் நாடாளுமன்ற அவையில் ஆட்சேபித்தன.

இஸ்லாமியர்களின் மத உணர்வுகளில் தலையிட்டு அவர்களின் உரிமையை பறிப்பது முறைதானா? என ஜனநாயக சக்திகள் மக்கள் மன்றத்தில் முறையிட்டனர். வக்ஃபு சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் வலுத்த நிலையில், நாட்டையே புரட்டி போட்டது பெஹல்காம் தீவிரத் தாக்குதல்.

காஷ்மீரின் பெஹல்காமுக்கு சுற்றுலா சென்றோரில் 26 பேரை கடந்த 22-ஏப்ரல் அன்று காட்டுமிராண்டிகள் சிலர் அநியாயமாக சுட்டுக் கொன்றனர். அந்தக் கொடும் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஒருவரை அநியாயமாகக் கொலை செய்பவன் ஒரு சமூகத்தையே கொலை செய்தவன் ஆவான் என கண்டிக்கிறது திருக்குர்ஆன் (5:32). ஆனால் ரிபப்ளிக் டிவி, டைம்ஸ்நவ் போன்ற பாசிச ஊடகங்கள் எப்போதும் போல இம்முறையும் தீவிரவாதிகளுக்கு முஸ்லிம் முலாம்பூசி இஸ்லாமிய வெறுப்புப் பிரச்சாரத்தை








> **பெஹல்காம் தீவிரவாத தாக்குதலில் பலியானோர், காயமுற்றோர் பட்டியலில் இஸ்லாமியர்களும் உள்ளனர். அங்கு பொதுமக்கள் பலரின் உயிரைக் காப்பாற்றியதால் வீரமரணம் அடைந்த குதிரை வீரர் சையது ஆதில் ஹுசைன்ஷா இஸ்லாமியர் இல்லையா?**

செவ்வனே செய்தன.

தீவிரவாதிகள் சுட்டுக் கொல்வதற்கு முன் பெயரைக் கேட்டார்கள், கீழாடையை கழற்றிடச் சொன்னார்கள். எனவே அவர்களை தண்டிப்பதற்கு பாகிஸ்தான் மீது நாம் போர் தொடுப்பதே தீர்வு என்று அர்ணப் கோசுவாமி போன்றோர் அதிதீவிரமாக அவதூறு பிரச்சாரத்தை செய்கின்றனர்.

பெஹல்காம் தீவிரவாத தாக்குதலில் பலியானோர், காயமுற்றோர் பட்டியலில் இஸ்லாமியர்களும் உள்ளனர். அங்கு பொதுமக்கள் பலரின் உயிரைக் காப்பாற்றியதால் வீரமரணம் அடைந்த குதிரை வீரர் சையது ஆதில் ஹுசைன்ஷா இஸ்லாமியர் இல்லையா? காஷ்மீர் முஸ்லிம்கள்தான் எங்களைப் பாதுகாத்து, எங்களுக்கு உணவும் அளித்தார்கள் என்று அங்கிருந்த சுற்றுலா பயணிகள் நெகிழ்ச்சியோடு கூறிய சாட்சியங்கள் பாசிச செவிடர்களுக்கு ஒருபோதும் கேட்பதில்லை.

நாட்டில் நடைபெறும் பயங்கரவாத செயலுக்கு முஸ்லிம்களை பலிகடா ஆக்குவதும், பிறகு உண்மை வெளிவந்த பிறகு அசடு வழிவதும் பாசிச ஊடகங்களின் வாடிக்கை.

கொரோனா பெருந்தொற்றை பரப்பியதே முஸ்லிம்கள்தான் என்று சொன்னவர்கள் தானே இவர்கள்!. காந்தியடிகளை கொலை செய்த கோட்ஷே, முஸ்லிம் பெயரான இஸ்மாயில் என பச்சை குத்திக் கொண்ட வரலாறும், மலேகான் குண்டு வெடிப்புகளும் பாசிச சங்கபரிவார கோரமுகத்தை நமக்கு உணர்த்தும்.

பெஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி ஒன்றிய பாஜக அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம் என்றார்.

நம் நாட்டின் முப்படை வீரர்களின் பாதுகாப்பையும் தாண்டி கடல், மலை, ஆகாயம் அல்லது தரைவழியாக தீவிரவாதிகள் பெஹல்காமுக்குள் உள்ளே நுழைந்தது எப்படி? எனவே இதற்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என்று எழுச்சித் தமிழர் தலைவர் திருமாவளவன் கோரினார்.

பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பதவி விலக வேண்டும் என்று பாஜகவின் சுப்பிரமணிய சுவாமி பகிரங்கமாக பேட்டி அளித்தார். இந்திய ராணுவ வீரர்களை தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாக்க முடியாத



பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும் என்று கடந்த 2014 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது மோடி விமர்சித்தார்.

அதன் பிறகு கடந்த 11 வருடங்களாக மோடிதான் நாட்டின் பிரதமராக உள்ளார். கடந்த 02-01-2016 அன்று இந்திய விமானப்படையின் பதன்கோட் விமானத்தளம் தாக்கப்பட்டது.

அதில் 12 இந்திய வீரர்கள் பலியாயினர். பிறகு 18-09-2016 அன்று ஜம்மு காஷ்மீரின் ஊரி நகரிலுள்ள ராணுவப் படைத் தலைமையகம் தாக்கப்பட்டது. அதில் 19 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர்.

அப்போதும் தேசபக்தி, இஸ்லாமிய தீவிரவாதம், பாகிஸ்தானை தாக்குவோம் என்ற தொனியில்தான் பாஜக ஆதரவு ஊடகங்கள் உரக்க கத்தின. அதன் விளைவாக 28-09-2016 அன்று பாகிஸ்தான் எல்லையில் இந்தியா துல்லியத் தாக்குதலை (சர்ஜிகல் ஸ்ட்ரைக்) மேற்கொண்டது.

இந்தியாவின் இரும்புமனிதர் மோடி, இந்தியாவை மீட்க வந்த மீட்பர் என்று கோடி மீடியாக்கள் புகழ்ந்து தள்ளின.

நாடே குதூகளித்த வேளையில் 08-11-2016 அன்று இரவு பிரதமர் நரேந்திர மோடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் திடீரெனத் தோன்றி ரூபாய் 500, 1000 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார்.

இந்த பணமதிப்பு இழப்பு நடவடிக்கையால் கருப்பு பணம் மீட்கப்படும், காஷ்மீரில் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். பணமதிப்பிழப்பு நடவடிக்கை இந்தியப் பொருளாதாரத்தின் மீதான துல்லியத் தாக்குதல் (சர்ஜிகல் ஸ்ட்ரைக்) என்றும், ஒழுங்குபடுத்தப்பட்ட கொள்ளை (ஆர்கனைஸ்டு லூட்) என்றும் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அன்றே விமர்சித்தார்.

பிறகு 14-02-2019 அன்று ஜம்மு காஷ்மீர் புல்வாமாவில் சிஆர்பிஎப் வாகனங்களின் மீது தீவிரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

இம்முறை திவிரவாதத்திற்கு எதிரான பிரச்சாரம் சற்று தூக்கலாக இருந்தது. காரணம் 2019 ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல். தேர்தலின்போது மோடி, அமித்ஷா பிரச்சாரங்களில் புல்வாமா தாக்குதல் ஓங்கி ஒலித்தது. இதன் காரணமாக தேர்தலில் பாஜக கூட்டணி 353 இடங்களில் அபார வெற்றி பெற்றது.

மோடி சர்க்காரில் பதன்கோட், ஊரி, புல்வாமா என இராணுவ வீரர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் பணமதிப்பிழப்பு நடவடிக்கை தோல்வி குறித்த எதிர்கட்சிகளின் கேள்விகளுக்கு பிரதமர் மோடி எந்தப் பதிலையும் அளிக்க வில்லை.

ஆனால் பாஜக ஆட்சி அமைந்ததும் 05-08-2019 அன்று இந்திய அரசியலமைப்பின் 370வது பிரிவின் கீழ் ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ஒன்றிய பாஜக அரசு ரத்து



செய்தது. இதன் மூலம் காஷ்மீரில் நடைபெறும் பாகிஸ்தான் தீவிரவாதம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விடும் என்று பிரதமர் மோடி மீண்டும் உறுதிப்படக் கூறினார்.

ஆனால் தீவிரவாதமும், தீவிரவாதிகளும் ஒழிந்தபாடில்லை என்பதற்கு பெஹல்காம் சிறந்த சாட்சி. பெஹல்காம் தாக்குதலுக்கு உடனடி பதிலடியாக சிந்துநதி ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக இந்திய ஒன்றிய அரசு அறிவித்தது.

மேற்படி ஒப்பந்தமானது சிந்து நதி மற்றும் அதன் துணை நதிகளில் கிடைக்கும் நீரைப் பயன்படுத்துவதற்காக கடந்த 1960இல் இந்தியா, பாகிஸ்தான் இடையில் கராச்சியில் நடைபெற்ற நீர் பகிர்வு ஒப்பந்தமாகும்.

இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் ஆகியோரால் உலக வங்கி அதிகாரிகள் முன்னிலையில் அப்போது கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் மூலம் மூன்று கிழக்கு நதிகளான பியாஸ், ரவி மற்றும் சட்லஜ் ஆகியவற்றின் மீது இந்தியா ஆளுமை செலுத்துகிறது.



மேற்கு நதிகளான சிந்து, செனாப் மற்றும் ஜீலம் நதிகள் மீதான கட்டுப்பாடு பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டது. ஆறுகளில் பெருகி வரும் மொத்த நீரில் அளவைப் பொறுத்து இந்தியாவும், பாகிஸ்தானும் முறையே 30, 70 சதவிகிதம் என்ற அளவில் கடந்த 65 ஆண்டுகளாக பிரச்சனையின்றி நீரை பகிர்ந்து பெறுகின்றன.

இந்நிலையில் பதிலுக்கு பாகிஸ்தானும் சிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது. கடந்த 1972 இல் இந்திய பிரதமர் இந்திராகாந்தி, பாகிஸ்தான் ஜனாதிபதி சுல்பிகர் அலி பூட்டோ ஆகியோருக்கிடையே சிம்லாவில் கையெழுத்தானது இந்த ஒப்பந்தம். அது பாகிஸ்தான் வங்கதேசத்தை ராஜதந்திர ரீதியாக அங்கீகரிப்பதற்கும் வழி வகுத்தது.

காஷ்மீர் பிரச்சினையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம், அமைதியான வழிகளில் நமது வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தம் கூறுகிறது. சிம்லா ஒப்பந்தம் மூலம்தான் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லை கட்டுப்பாட்டு கோடு வரையறுக்கப்பட்டது. மேலும் இருதரப்பினரும் ஒருதலைப்பட்சமாக அதை மாற்ற முயற்சிக்கக் கூடாது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. சிந்துநதி, சிம்லா ஒப்பந்தங்களின் ரத்து பற்றிய அறிவிப்பானது ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நீதிமன்றம், உலக வங்கி என்று இரு நாட்டு எல்லைக் கோடுகளைத் தாண்டிய அவையில் இனி பேசப்படக் கூடும்.

ஈரான், பாகிஸ்தான் உள்ளிட்ட இஸ்ரேல் எதிர்ப்பு அரபு நாடுகளை அணு ஆயுதமற்ற நாடுகளாக மாற்றிடத் துடிக்கும் சர்வதேச ஜியோனிஸ அரசியலில் இந்தியா சிக்கிவிடக் கூடாது என்று எச்சரிக்கிறோம்.

கடந்த மாதங்களில் ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஆகியோரை சந்தித்து ரஷ்யா - உக்ரைன் போரை கைவிடச் சொன்ன பிரதமர் மோடி, தற்போது பாகிஸ்தானுடன் போர் முரசு கொட்டுவது நகைமுரண் அல்லாமல் வேறென்ன? போரின் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க இயலாது. நாட்டின் லடாக் பகுதிக்குள் குடியேறி சுமார் 4000 சதுர கிலோ மீட்டர் அளவு ஆக்கிரமித்துள்ள சீனா மீது நாம் போர் தொடுக்கவில்லை.

மனிதத்தையே மாய்க்கும் மதவெறி பேச்சாலோ, பாகிஸ்தானுக்கு எதிரான போர்ப் பிரகடனத்தாலோ வளமான இந்தியாவை உருவாக்க முடியாது.

மாவீரன் ஹேமந்த் கர்க்கரே, அசோக் சவான் போன்ற நேர்மையான காவல்துறை அதிகாரிகளை இழந்த பின்னரே அஜ்மல் கசாப் போன்ற தறுதலைகளை நம்மால் ஒழிக்க முடிந்தது.

கடந்த 2008இல் மும்பை தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளை வெளியுலகுக்கு காட்டாமல் மறைத்ததைப் போல அல்லாமல், பெஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட உண்மை குற்றவாளிகளை இந்திய மக்களுக்கு பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும். அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும். உயிரை இழந்து வாடும் குடும்பங்களுக்கு அரசு உரிய இழப்பீட்டை வழங்கிட வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கோருகிறோம்.




# அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்..!

## பணிவுதான் தலைமைப் பண்பின் அடையாளம்..!!



அரசன் ஒருவன் தவறான வழியில் ஆட்சி செய்தால், அவனது தவறான செயல்களுக்கு அறம் தண்டனை அளிக்கும். அறம் என்பது நியாயம், நீதி, நல்லொழுக்கம் போன்ற நற்பண்புகளைக் குறிக்கும்.

தவறிழைப்போர் தண்டனையை அனுபவித்தே தீருவர். இதுதான் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பதின் பொருள்.

மேற்சொன்ன நற்பண்புகளின் பிறப்பிடமாக அரசியல் அரங்கம் இருக்க வேண்டும் என்பதே நமது விருப்பம். ஆனால் நடப்பு அரசியலில் அது குறைவாகவே உள்ளது. சூழ்ச்சி, துரோகம், பொய், புரட்டு, நயவஞ்சகத்தனம், விதிமீறல், லஞ்சம், கபடத்தனம் ஆகியவைதான் அரசியல் என்றாகி விட்டது.

அரசியல் அரங்கில் அறச்சீற்றத்தோடும்,





நேர்மையோடும் களமாடுவர்களை இந்தச் சமூகம் அங்கீகரிக்கிறதா? அரவணைக்கிறதா? நேர்மையானவர்கள் நயவஞ்சகர்களாகவும், தியாகிகள் துரோகிகளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். சுயநலவாதிகளிடம் சமூக கட்டமைப்புகள் சிக்கி சீர்கெட்டுள்ளது. ஊரை அடித்து உலையில் போடுபவன்தான் உத்தமனாகக் கருதப்படுகிறான்.

அரசியல் வயலில் நீர் பாச்சி, உரமிட்டு, நாற்று நட்டி, ஏர்பூட்டி, களை பறித்து உழைப்பவன் ஒருவன். அறுவடை நேரத்தில் பயிரை அறுத்து கொள்ளையிடுபவனோ மற்றொருவன். இதுதான் இந்திய அரசியலின் எதார்த்தம். ஒருவரை வஞ்சித்து கீழே தள்ளிவிட்டு மிதித்துதான் தாம் அதிகாரம் பெற வேண்டும் என்பதே பலரின் வேட்கையாக உள்ளது.

தன்னைவிட ஒருவர் அதிகமாக உழைத்து நேர்வழியில் உயர்ந்த நிலையை அடைய முனையும்போது அதைக் கண்டு பொறுக்க முடியாமல் அவர் கால்களை இழுத்து கீழே தள்ளுவது அரசியல் நண்டுகளின் சுயரூபம்.

*Divide and Rule in Indian Party Politics The Rise of BJP* (இந்திய கட்சி அரசியலில் பிரித்தலும் சூழ்ச்சி பாஜகவின் எழுச்சி) என்ற ஆய்வுக்கட்டுரை பாஜக தன்னோடு கூட்டணி வைக்கும் கட்சிகளையும், பிற கட்சிகளையும் சும்மா விட்டு விடாது என்று சுட்டிக் காட்டுகிறது.

கொள்கை தெளிவுள்ளவர்களை எந்த சக்தியாலும் பிளவுபடுத்த முடியாது என்றாலும், கூட இருந்தே குழி பறிக்கும் ராஜதுரோகச் செயல்கள் அரசியல் உலகில் நாகரிமாகிப்போனது உண்மைதானே.

தேசியவாத காங்கிரஸில் சரத்பவர் - அஜித்பவார் பிரிவு, சிவசேனாவில் உத்தவ்தாக்கரே - ஏக்னாத் சிண்டே பிளவு, திரிணாமுல் காங்கிரஸ் மம்தா பானர்ஜி - சுவந்து அதிகாரி பிரிவு, மதச்சார்பற்ற ஜனதாதளம் - ஐக்கிய ஜனதாதளம் என இரு


**“அதனால்தான் 1100 நாட்களை தாண்டி ரஷ்யா உக்ரைன் போரும், 600 நாட்களை கடந்து காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலையும் இன்றும் நீடிக்கிறது.”**

கூறுகள் போன்றவற்றின் பிண்ணனி என்ன? ஜார்க்கண்ட் முக்தி மோர்ட்சா கட்சி தலைவர் ஹேமந்த் ஷோரனுக்கும் ஏற்பட்ட நெருக்கடிகள்.

புதுதில்லியில் ஆம்ஆத்மி கட்சிமீதான அத்துமீறல். தலித் சமூகத் தலைவரான ராம்விலாஸ் பஸ்வான் மகன் சிராக் பஸ்வானின் தற்போதைய நிலை. தமிழ்நாட்டில் அதிமுகவை இபிஎஸ், ஒபிஎஸ், டிடிவி, சசிகலா அணிகள் என கூறுபோட்டு பிரித்தது யார்? இவற்றையெல்லாம் நன்கு அறிந்த மருத்துவர் ராமதாஸ், பாஜகவுடன் கொண்ட கூடா நட்புதான் இன்று கேடாய் முடிந்துள்ளது என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

இதில் தங்களுக்கு சம்பந்தமில்லை என்று பாஜக மறுக்கிறது. பாமகவில் நடைபெறும் உட்கட்சி பிரச்சனையில் நமக்கும் கருத்தில்லை. ஒரு நாடு என்பது நிலங்களின் தொகுப்பு அல்ல மாறாக அது மக்களின் தொகுப்பு என்பதை அரசியல் உலகம் என்றோ மறந்து விட்டது.

அதனால்தான் 1100 நாட்களை தாண்டி ரஷ்யா உக்ரைன் போரும், 600 நாட்களை கடந்து காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலையும் இன்றும் நீடிக்கிறது.



**அமலாக்கத்துறை அதிகாரிகளை கண்டித்திருப்பது மேற்படி விமர்சனத்தை உண்மைப் படுத்துகிறது.**

பாலஸ்தீன காஸாவில் இஸ்ரேலின் குண்டுவீச்சால் தகர்க்கப்பட்ட வீடுகள் 55,000, கொல்லப்பட்டோர் 60,000, புலம் பெயர்ந்தோர் 1,30,000 என அறிக்கை கூறுகிறது.

குழந்தைகள் பசி போக்கிட ஐநாவின் நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்கு செல்லும் மக்களை குறிபார்த்து சுடுகிறது இஸ்ரேல்! பெரும் உணவு பஞ்சத்திற்கு மத்தியில் தனது வசிப்பிடத்தையும், குடும்பத்தையும் இழந்து அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்த காஸாவாசிகளையும் இஸ்ரேலிய இராணுவம் சுட்டுக் கொல்கிறது.



இந்நிலையில்தான் தியாகத் திருநாள் பக்ரீத் பெருநாளை அந்த காஸா நகர முஸ்லிம்கள் எதிர் நோக்கியுள்ளனர்.

அமெரிக்கா இயற்றும் நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தந்தை ஏற்க நாங்கள் தயார் என ஹமாஸ் அறிவித்து விட்டது. ஆனால் இஸ்ரேல் தொடர்ந்து முரண்டு பிடிக்கிறது. இஸ்ரேலின் அதிபர் பெஞ்சமின் நெட்டன்யாகுவுக்கு எதிராக இஸ்ரேலிய மக்களே கிளர்ச்சி செய்கின்றனர். காஸாவின் மனித இனப் படுகொலைக்கு எதிராக உலகமே திரண்டுள்ள நிலையில் இஸ்ரேலின் போர் வெறி இன்னும் தனிந்திட வில்லை.

அரபு நாடுகளின் தலைவர்கள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை அழைத்து பரிசளித்தும், பல்லாயிரம் கோடி ரூபாய் வர்த்தக உடன்படிக்கை செய்தும் மகிழ்ந்தனர். அமெரிக்காவின் புதிய வரிவிதிப்புக் கொள்கை உலக பொருளாதாரத்தை புரட்டிப் போட்டுள்ளது. இது ஒரு சர்வதேச அரசியல் சதுரங்கம். அதன் பொருள், இன்பத்தில் அறத்தை காண முடியாது.

பெஹல்காம் தீவிரவாத தாக்குதல், பிறகு நமது ராணுவத்தின் சிந்தூர் நடவடிக்கை என இந்தியா பாகிஸ்தான் உறவு சிதைந்து விட்டது. இந்தியாவின் நிலையை விளக்கிகூற நமது பிரதிநிதிகள் உலகத் தலைவர்களை சந்தித்துள்ளனர்.

நமது ராஜதந்திரம் வெற்றி பெற்றதா? போரை நிறுத்தியது அமெரிக்க அதிபாரா? என விடைதேடும் வினாக்கள் ஆயிரம். நல்லவேளை நமது சமகால அரசியலை காண சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளும் இல்லை, பாண்டிய மன்னனும் இல்லை.

ரபேஃல் விமான கொள்முதலில் பாஜக பெரும் ஊழல் செய்துள்ளது. இந்தியா, பாகிஸ்தான் போரின்போது இந்தியாவின் மதிப்புமிக்க ரபேஃல் விமானங்களை பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியது குறித்து விசாரணை வேண்டும் என பாஜகவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கோருகிறார்.

மோடி பிரதமராக இருக்கும் நிலையில் இதுபோன்று விசாரணை எல்லாம் நாட்டில் நடைபெறாது எனவும் கடுமையாக

விமர்சித்துள்ளார்.

பிரதமர் மோடி சுப்பிரமணியன் சுவாமியின் விமர்சனத்தை கண்டு கொள்ளவில்லை. வழக்கம் போல அவர் மேற்குவங்கம், பீகார் தேர்தல் பிரச்சாரங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

எப்போதும் போல இம்முறையும் உத்திர பிரதேசத்தில் 180 இஸ்லாமியர் குடியிருப்புகளை குறிவைத்து அவை வனத்துறைக்குச் சொந்தமானவை என்று அரசு அறிவிப்பு கொடுத்துள்ளது.

லக்னோ நகருக்கு வடகிழக்கில் சுமார் 125 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பஹ்ரைச் நகரில் 185 ஆண்டு கால பழைமை வாய்ந்த நூரி பள்ளிவாசலையும் இடித்திட துடிக்கின்றனர். வக்ஃபுச் சட்டம் உச்சநீதிமன்ற பரிசீலனையில் இருக்கும் நிலையிலேயே இத்தகைய கோரத்தாண்டவம் ஆடுகிறது உ.பி பாஜக அரசு.

இதனால்தான் அந்த பாசிச சட்டத்தை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எதிர்வரும் ஜூன் 14-ஆம் தேதி திருச்சியில் மதச்சார்பின்மை காப்போம் என்ற பெயரில் வக்ஃபு திருத்தச் சட்டத்தை எதிர்த்து விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் மாபெரும் பேரணி நடைபெற உள்ளது.

பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத்திலோ ஆக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரால் சுமார் 7,000 க்கும் அதிகமான தலித், இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களின் வீடுகளைத் தகர்த்து அப்புறப்படுத்தி உள்ளனர்.

டைம்ஸ் நவ், ரீபப்ளிக் போன்ற பல மீடியாக்கள் மோடியாட்களாக மாறிவிட்டதால் அது பற்றிய செய்திகளை வெளியிட மாட்டார்கள்.

இது குறித்து விளக்கம் அளிக்காத பிரதமர் மோடி அவர்கள், மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியோடு மல்லுக்கட்டிக் கொண்டு வார்த்தை போரில் ஈடுபடுவது நகை முரண் அல்லாமல் வேறென்ன? 'பணிவுதான் தலைமைப் பண்பின் அடையாளம்.

சொல்லைவிட செயலே பெரிது' என்று மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற திமுக பொதுக்குழு கூட்டத்தில் கூறியது பிரதமர் மோடிக்கு சாலப் பொருந்தும்.

நமது நாட்டின் அரசியலமைப்பின்படி தவறிழைப்போரை விசாரிக்கத்தான் அமலாக்கத்துறை. ஆனால் அந்த அமலாக்கத்துறை அதிகாரிகளே லஞ்சம் பெற்று கையும் களவுமாக பிடிபடுவது எதைக் காட்டுகிறது?

பாஜகவின் கைப்பாவையாக செயல்பட்டு எதிர்க்கட்சிகளை பழி வாங்குவதற்குதான் அமலாக்கத்துறை என்பது விமர்சனம். நீங்கள் கூட்டாட்சியின் தத்துவத்தை சிதைக்கிறீர்கள். உங்கள் வரம்புகளை மீறுகிறீர்கள் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களே மேற்படி அமலாக்கத்துறை அதிகாரிகளை கண்டித்திருப்பது மேற்படி விமர்சனத்தை உண்மைப் படுத்துகிறது.

> அரசியல் அரங்கில் அறச்சீற்றத்தோடும், நேர்மையோடும் களமாடுபவர்களை இந்தச் சமூகம் அங்கீகரிக்கிறதா? அரவணைக்கிறதா? நேர்மையானவர்கள் நயவஞ்சகர்களாகவும், தியாகிகள் துரோகிகளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். சுயநலவாதிகளிடம் சமூக கட்டமைப்புகள் சிக்கி சீர்கெட்டுள்ளது. ஊரை அடித்து உலையில் போடுபவன்தான் உத்தமனாகக் கருதப்படுகிறான்.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் அவையில் கண்ணகி தனது கால் சிலம்பை உடைத்து தன் கணவன் கோவலனின் உண்மைத் தன்மையை நிரூபித்தாள். தான் தவறிழைத்ததை உணர்ந்து மனம் வருந்திய மன்னன் 'யானோ அரசன் நானே கள்வன்' என அழுது புலம்பினான். மாறாக யார் அந்த சார்? என்ற கேள்வி எழுப்பி அரசியல் செய்யவில்லை.

காரணம் 'ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதை அவன் உணர்ந்திருந்தான். எனவே நாட்டின் அரசியல் ஒழுங்கற்றுப் போகுமாயின் அது சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் சிதைத்து விடும். அநீதி மேலோங்கி அதர்மம் எழுந்தாடி அழிவும் அக்கிரமமும் விளையும். நாட்டு மக்கள் துன்பப்படுவர். இதை ஆளும் அரசுகள் உணர வேண்டும்.



# அழிவு தரும் போதையை தவிர்ப்போம்!

## ஆற்றல்மிகு உலகைப் படைப்போம்...



நடிகர் ஸ்ரீகாந்த், நடிகர் கிருஷ்ணா உள்ளிட்ட பிரபலங்களின் போதை விவகாரம் திரைப்படத் துறையினர் இந்த அளவுக்கா போதைக்குள் சிக்கித் தவிக்கின்றனர்? என புருவம் உயர்த்த வைக்கிறது. காவல்துறையின் புலனாய்வு விசாரணைகள், கைது நடவடிக்கைகள், சிறை கைதிகள் அளித்த வாக்கு மூலங்கள் நம்மை அதிர்ச்சி அடைய வைக்கின்றன.

போதை மாபியா கும்பலின் பிடியில் பல நடிகர், நடிகைகள் சிக்கி உள்ளதாகவும், தான் நடித்த படங்களுக்கு சம்பளம் வாங்குவதற்குப் பதிலாக நடிகர் ஸ்ரீகாந்த் கொக்கைன் போன்ற போதைப் பொருளை வாங்கியதாகவும் தகவல். சினிமா பிரபலங்களை தங்களின் முன்மாதிரியாகக் கருதும் தற்கால இளைஞர்கள், யுவதிகள் இச்சம்பவத்திலிருந்து தகுந்த பாடம் கற்க வேண்டும்.

நீண்ட நாட்கள் போதை பழக்கத்திற்கு உள்ளானவர்களின் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுகிறது. அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது. அத்தகையோரின் இதயம், கல்லீரல், மூளை உள்ளிட்ட உள் உறுப்புகள் பெரும் பாதிப்பு அடைகின்றன. இறுதியில் மூளை

"ஒரு மாணவன் போதைக்கு அடிமையாகும் போது அவனுக்கு மனச்சோர்வு உள்ளாகி வகுப்பில் பாடங்களை கவனிக்க முடியாத நிலை ஏற்படுகிறது."



செயலிழப்புகூட ஏற்படுவதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

போதைக்கு அடிமையானவர்கள், கடும் மன அழுத்தத்திற்கும், மன உளைச்சலுக்கும் உள்ளாகின்றனர். அவர்களுக்கு பயம், சந்தேகம், உளவியல் குழப்பங்கள் ஏற்படுகிறது. மனநோய் அதிகமாகி இறுதியில் அவர்கள் தற்கொலையும் செய்து விடுகின்றனர்.

ஒரு மாணவன் போதைக்கு அடிமையாகும் போது அவனுக்கு மனச்சோர்வு உள்ளாகி வகுப்பில் பாடங்களை கவனிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. பின்னர் தூக்கமின்மை, பலவீனம், ஏமாற்றம், தேர்வில் தோல்வி எனத் தொடங்கி அவன் தீய நட்புகளில் சிக்கும் அபாயம் ஏற்படுகிறது. ஒரு குடும்பத் தலைவன் மது, போதைக்கு அடிமையானால் அவனின் குடும்ப வாழ்க்கை வீழ்ச்சி அடைந்து வறுமை நிலை ஏற்படுகிறது.



போதை இல்லாத தமிழ்நாடு அமைந்திட விழிப்புணர்வு முன்னேற்பாடுகள், செயல் திட்டங்கள் என அரசு எவ்வளவுதான் திட்டமிட்டு செயல்பட்டாலும் போதையை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. அரசு இயந்திரங்கள், காவல்துறையினர், கல்வித்துறை பிரதிநிதிகள் என அனைவரும் ஒன்றிணைந்து போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்களை உருவாக்கிட வேண்டும். போதைக்கு எதிரான விழிப்புணர்வை முடுக்கிவிட வேண்டியது காலத்தின் கட்டாயம். போதையை ஒழிப்பது ஆளும் அரசாங்கத்தின் கடமையே என பொதுமக்கள் விலகிக் கொள்ள முடியாது. அரசு மற்றும் சமூகக் கூட்டாண்மையின் மூலமாகத்தான் ஒரு நாட்டில் போதையை ஒழிக்க முடியும்.

போதை என்பது மது, கஞ்சா, புகைப்பிடித்தல் உள்ளிட்டவை மட்டும் அல்ல. மாறாக பொருள் சார்ந்த போதைகள் *(Substance Addiction)*, நடத்தை சார்ந்த போதைகள் *(Behavioural Addiction)*, மனநிலை சார்ந்த போதைகள் *(Psychological Addiction)*, உடல் சார்ந்த போதைகள் *(Physical Addiction)* என போதை பல வகைப்படுகிறது.

டீ, காபி, கஃபின், இனிப்பு வகை போன்ற உணவுகளை வரைமுறையற்று உட்கொள்வது ஒழுங்கற்ற உணவு போதை. சூதாட்டம், வீடியோ கேம் போன்றவை விளையாட்டு போதை. சமூக ஊடகம் மற்றும் அதிக மொபைல் பயன்பாடும் போதைதான்.

பொருட்களை வாங்கிக் குவிக்கும் ஷாப்பிங் போதை. லாபம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட பண போதை. மண், பொன், பெண் போதைகள். மக்கள் கவனம் தன்மீது ஏற்பட வேண்டும், தான் புகழப்பட வேண்டும் என்ற புகழ் போதை. அரசியல் பதவி, ஆட்சி அதிகாரம் எனும் அதிகார போதை. எதிரியை வீழ்த்திவிட வேண்டும் என்ற மனநிலை மேலோங்கி எழும் பழிவாங்கும் போதை என இந்தப் பட்டியல் நீளுகிறது.

இதில் ஆட்சி அதிகாரம் என்பதை மக்கள் சேவைப் பணியின் உச்ச நிலையாகக் கருத வேண்டும். ஆனால் அதை, தான் மட்டுமே தொடர்ந்து அனுபவிக்க வேண்டும் என அதீத வேட்கையாக அது மாறும்போது, அது அதிகார போதையாக மாறுகிறது.

அதனால் ஜனநாயகம் அழிகிறது, பிறர் சுதந்திரம், உரிமைகள் ஒடுக்கப்படுகிறது, நாட்டின் ஆட்சி முகைமை கூட பாழ்படுகிறது. அதிகார



போதையின் கோரத்தாண்டவத்தால் பல லட்சக்கணக்கான மனித உயிர்கள் அழிந்து போனதுதான் உலக வரலாறு.

மத்திய கிழக்குப் பகுதியில் தான்தான் சட்டாம்பிள்ளை என்பதை நிறுவிட இஸ்ரேல் ராணுவம் இரவோடு இரவாக ஈரானுக்குள் அத்துமீறி நுழைந்ததும், ஈரானின் அணு விஞ்ஞானிகளையும், இராணுவ தலைவர்களையும் குண்டு வீசிக் கொன்றதும் சர்வதேச அதிகார போதை ஆகும். மேற்படி ஈரான், இஸ்ரேல் விவகாரத்தில் மூக்கை நுழைத்து, இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரானின் அணு உலைகளைத் தாக்கி அழித்த அமெரிக்காவின் கொடுஞ்செயல் அதிகார போதையின் உச்சம் என்று சொல்லலாம்.

அதற்குப் பதிலடியாக கடந்த 1934 ஆம் ஆண்டு இஸ்ரேலின் ரெஹோவோட் நகரில் நிறுவப்பட்ட இஸ்ரேலின் புகழ்பெற்ற வெய்ஸ்மேன் ஆராய்ச்சி நிறுவனம், ராணுவத் தளங்கள், விமானப்படை தளங்கள் உள்ளிட்ட இஸ்ரேலின் பல முக்கியத் தளங்களை ஈரான் தனது விதவிதமான ஏவுணைகளைக் கொண்டு தாக்கி அழித்தது.



இவ்வாறு அமெரிக்க, இஸ்ரேலிய ஆதிக்க அதிகார போதையால் மத்தியக் கிழக்கில் பல எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டது. அதனால் சர்வதேச பதட்டங்கள் அதிகரித்தன. ஆயுதப் போட்டிகளும், மோதல்களும் சர்வதேச அளவில் விரிவடையும் சூழல் ஏற்பட்டது.

ஏற்கனவே கடந்த 1953இல் அமெரிக்கா ஈரானின் உள்விவகாரங்களில் தலையிட்டதால் அமெரிக்க வல்லாதிக்க எதிர்ப்பு நிலை ஈரான் மக்களிடையே இன்றும் நீடிக்கிறது. அதனால்தான் 1979இல் ஆயத்துல்லாஹ் கொமேனி தலைமையில் அங்கு அமெரிக்க எதிர்ப்பு இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்டது.

இந்நிலையில்தான் கடந்த 22-06-2025 அன்று ‘ஆபரேஷன் மிட்நைட் ஹேமர்’ எனும் பெயரில் அமெரிக்கா, ஈரானின் அணு உலைகள் மீது தாக்குதலை நடத்தி மீண்டும் சீண்டியது.

ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய யூனியன், இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு, சர்வதேச அணுசக்தி நிறுவனம் உள்ளிட்டவை அமெரிக்காவின் தாக்குதலை கண்டித்தன.

ரஷ்யா, வடகொரியா, சீனா ஆகிய வல்லரசு நாடுகள் ஈரானுக்கு தங்கள் ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்தன. இறுதியில் மூன்றாம் உலக யுத்தத்திற்காக சூழ்ந்த போர் மேகம் கலைந்தது.

ஜெர்மனியின் அடால்ஃப் ஹிட்லர் தனது மேலோங்கிய சர்வாதிகாரத்தால் உலக யுத்தம் கண்டார். இத்தாலியின் பெனிட்டோ முசோலினி பாசிசத்தின் வாயிலாக ஜனநாயகத்தை அழித்தார். சோவியத் யூனியனின் ஜோசப் ஸ்டாலின் தன்னை எதிர்க்கும் யாரும் மக்களுக்கு எதிரி என்ற அதிகாரக் கொள்கையை கொண்டார்.

ஜிம்பாப்வே நாட்டின் ராபர்ட் முகாம்பே பல முறைகேடுகள், தேர்தல் மோசடிகள், பொருளாதார வீழ்ச்சி, மக்களின் வறுமை என 37 வருடங்கள் ஆட்சி புரிந்தார். இவர்களது ஆட்சி அதிகார வரலாற்றில் நமக்கும், குறிப்பாக நமது நாட்டை ஆளும் ஒன்றிய பாஜக அரசுக்கும் மிகப்பெரிய படிப்பினை இருக்கிறது.

தன் பதவிக் காலத்தை மீறி அதிகாரத்தை தன் கையில் வைத்திருப்பது, சட்டங்களை தமக்கேற்றவாறு மாற்றுவது, ஊடகங்களை கட்டுப்படுத்துவது, எதிர்ப்புகளை அடக்குமுறை கொண்டு ஒடுக்குவது என அதிகார போதையின் எல்லை விரிவடைகிறது. பின்னர் அது அதிகார துஷ்பிரயோகமாக மாறுகிறது.

சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தைச் சார்ந்த இளைஞர் அஜித்குமார் என்பவரை திருப்புவனம் காவல்துறையினர் விசாரணை என்ற பெயரால் அடித்துக் கொலை செய்த அதிர்ச்சி சம்பவம் காவல்துறையின் அதிகார துஷ்பிரயோகத்தைக் காட்டுகிறது.

குறிஞ்சி நில வேந்தன் என்று தமிழ் உலகம் போற்றிப் புகழும் முப்பாட்டன் முருகனை அரசியலுக்குள் இழுத்து விட்டு நாட்டில் மதப்பிரிவினையைத் தூண்டுவதற்கு பின்னால் ஒளிந்திருப்பதும் அதிகார போதைதான். எனவே அழிவுதரும் இத்தகைய போதைகளைத் தவிர்ப்போம்! ஆற்றல் மிகு உலகைப் படைப்போம்.



# பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசு...











பள்ளி மாணவ, மாணவியருக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா உள்ளிட்ட பல திறன் மேம்பாட்டு போட்டிகளை நடத்தி, வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்திய போது...


"கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய தேர்தல் ஆணையமும், பாஜகவும் கூட்டு சேர்ந்து கொண்டு பல முறைகேடுகளை செய்துள்ளன. நான் ஏற்கனவே 'வாக்கு திருட்டு' நடைபெறுகிறது என்று கூறியிருந்தேன். இப்போது எங்களிடம் 'அணு குண்டு' அளவிலான ஆதாரங்கள் உள்ளன. அது வெடிக்கும்போது, தேர்தல் ஆணையம் வாக்குகளை திருடி பாஜகவுக்கு உதவியுள்ளது வெட்ட வெளிச்சமாகி விடும். நம் நாட்டின் தேர்தல்முறை முற்றிலுமாக இறந்து விட்டது." இது எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி அவர்கள் கூறிய பகிரங்க குற்றச்சாட்டு.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக சுமார் 70 முதல் 100 தொகுதிகள் வரை நேரடியாக முறைகேடுகள் செய்து வெற்றி பெற்றுள்ளது. ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் வாக்காளர்கள் பட்டியலில் போலியாக சேர்க்கப் பட்டுள்ளனர். இதற்காக காங்கிரஸ் கட்சி சுமார் 6 மாதங்கள் ஆய்வு செய்து ஆதாரத்தை திரட்டியதாக திரு ராகுல்காந்தி கூறியுள்ளார். இத்தகைய ஓட்டு



# இம்முறையும் தப்பிக்குமா தேர்தல் ஆணையம்?

# எப்போது வெடிக்கும் அந்த அணுகுண்டு?






திருட்டை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் போராட்டத்தை முன்னெடுத்து இருக்கின்றன.

இந்நிலையில் தமிழ்நாட்டில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த சுமார் 6.5 லட்சம் தொழிலாளர்கள் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாக வரும் தகவல் நம்மை அதிர்ச்சி அடையச் செய்கிறது. ஒரு வாக்காளர் தனது வாக்காளர் அடையாள அட்டையின் பெயர், முகவரியில் மாற்றம் வேண்டினால் அவருடைய இருப்பிட ஆதாரம், அடையாள ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருவர் புதிய வாக்காளராக சேருவதற்கு, அடிப்படை தகுதிகளோடு அவர் அந்த பகுதியில் குறைந்தது 6 மாதம் குடியிருப்பாளராக இருக்க வேண்டும். மேலும் அவருக்கு வேறெங்கும் வாக்காளர் அட்டை இல்லை என்பதை உறுதி செய்யப்பட வேண்டும். இதன் அடைப்படையில்தான் வாக்காளர் பட்டியலில் திருத்தம், சேர்த்தல் நடைபெறும். இதுதான் விதிமுறை. சட்ட விதிகள் இவ்வாறு இருக்க தங்களின் வேலைவாய்ப்பு, வியாபாரம், அலுவல் பணிகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள பல லட்சம் வடமாநில தொழிலாளர்களை தமிழ்நாட்டின் வாக்காளராக சேர்ப்பது தேர்தல் சட்டங்களை மீறும் செயல்.

இடம் பெயரும் தொழிலாளர்களை இழிவுபடுத்தும் செயலாகவும் இது அமைகிறது. தமிழ்நாட்டில் காலூன்றுவதற்கு பாஜகவினர் என்னதான் முயற்சித்தாலும் தொடர்ந்து தோல்வியே அடைகின்றனர். எனவே இத்தகைய சட்டவிரோத குடியேற்றத்தால் தமிழ்நாட்டின் ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்றும் சதித்திட்டம் இதில் உள்ளதோ? என்று பொதுமக்கள் கருதுகின்றனர்.

மாநிலங்களுக்கிடையே இடம்பெயர்ந்த





தொழிலாளர்கள் சட்டம் கடந்த 1979 இல் இயற்றப்பட்டது. அதில் இந்தியாவுக்குள் இடம்பெயர்ந்து வாழும் தொழிலாளர் நலன்கள் மற்றும் அவர்கள் நிலையான தொழிலாளர்களாக மாறுவதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

அதன் மூலம் தொழிலாளர்கள் உதவித்தொகை, பயணச் செலவுத்தொகை, உள்ளூர் தொழிலாளர்களுக்கு சமமான ஊதியம். அவர்களின் குடியிருப்பு, மருத்துவ வசதி, பாதுகாப்பான உடைகள் போன்றவை வழங்கப்பட்டு வந்தன.

தொழிலாளர்களை பணியில் அமர்த்தும் நிறுவனங்கள் அரசு பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். நியமனம் செய்யும் கான்ட்ராக்டர்கள் உரிய உரிமங்களைப் பெற வேண்டும் என்பதும் அச்சட்டத்தில் உள்ளடங்கும். கடந்த 1970 முதல் நடைமுறையில் இருந்த ஒப்பந்த தொழிலாளர் சட்டம் இதற்கு வழிகோலாக அமைந்தது.

நாடு முழுவதும் கட்டுமான வேலைகள் நடைபெறுகின்றன. அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு கடந்த 1996 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் சட்டம் இயற்றப்பட்டது.

இதன் காரணமாக தொழிலாளர்கள் நல வாரியத்தில் தங்களை பதிவு செய்வதற்கும், பணியாற்றும் இடங்களில் தங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இச்சட்டம் வழி வகுத்தது. கட்டிட வேலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களுக்கான ஓய்வூதியம், மருத்துவ காப்பீடு, குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை என இச்சட்டத்தின் படியே பெற்று வருகின்றனர்.

கடந்த 2008 இல் இயற்றப்பட்ட தொகுப்புச்சாரா தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்புச் சட்டம் மூலம் தொழிலாளர்களுக்கான சுய அடையாள




அட்டைகள்கூட வழங்கப்பட்டன.

அத்தகைய தொழிலாளர்கள் திருவிழா காலங்களில் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று வருவதைப் போல, தேர்தல் நேரங்களில் அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்குச் சென்று வாக்களித்து தங்களது ஜனநாயகக் கடமையைச் செய்து வந்தனர். ஆனால் அத்தகைய தொழிலாளர்களை பிற மாநிலங்களின் வாக்காளர் பட்டியலில் சொருகும் நடவடிக்கைகளில் இந்திய ஆட்சியாளர்கள் யாரும் ஈடுபட்டதில்லை.

ஆனால் மோடி சர்க்கார் கடந்த 2020, 2021 ஆம் ஆண்டுகளில் இச்சட்டங்களில் சில மாற்றங்களை கொண்டு வந்தது. அதன் பரிணாம வளர்ச்சியாக 'ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை' திட்டம், 'பிரதமர் கரிப் கல்யாண் ரோஜ்கார் அபியான்' திட்டம் என அறிமுகப்படுத்தப் பட்டன. இதனால் ஏற்பட்ட விளைவுதான் இன்று பீகார் மாநிலத்தில் சுமார் 65 லட்சம் பீகார் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.




பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கை என்ற பெயரில், 3 வெள;வேறு மதங்கள் மற்றும் 5 வெவ்வேறு ஜாதிகளைச் சார்ந்தவர்களை ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள் என்று போலியான வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. உயிரோடு உள்ள பல்லாயிரம் வாக்காளர்களை அவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறி வாக்காளர் பட்டியலிருந்து நீக்கியுள்ளனர். பீகார் எதிர்கட்சித் தலைவராக உள்ள தேஜஸ்வி யாதவின் பெயர்கூட வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது மற்றுமொரு அதிர்ச்சி செய்தி.

65 லட்சம் பீகார் வாக்காளர்கள் நீக்கம் குறித்து நாடாளுமன்ற நடப்பு மழைக்காலக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி உட்பட இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள் விவாதித்தனர். குறிப்பாக நான் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நிலையில் பீகார் வாக்காளர் முறைகேடுகள் குறித்து எனக்கு பேச வாய்ப்பு தரப்படவில்லையே ஏன்? இதுதான் ஜனநாயகமா? என்று ராகுல்காந்தி பிரதமர் மோடியின் முன்னால் நின்று கேள்வி எழுப்பினார்.

பெஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பின், உலக நாடுகள் பாகிஸ்தானை கண்டிக்காதது இந்திய வெளியுறவுக் கொள்கையின் தோல்வி என்றார். சீனா, பாகிஸ்தான் கூட்டணி உருவாகி உள்ளது நமது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப்பெரும் ஆபத்து என்றார். நான் சொல்லித்தான் இந்தியா பாகிஸ்தான் போர் முடிவுக்கு வந்தது என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ஃப் சுமார் 29 முறை கூறியும் மோடி அரசு ஏன் அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை? டொனால்டு டிரம்பின் பேச்சு இந்திய இறையாண்மைக்கு விடப்பட்ட சவால் இல்லையா? என்று கேள்வி எழுப்பினார்.

நம் நாட்டின் ராணுவத்தையும், விமானப் படையையும் அரசியல் தேவைக்காக பிரதமர் மோடி பயன்படுத்தியது தவறு என்று குற்றம் சாட்டினார். நம் நாட்டின் ரஃபேல் விமானங்கள் பாகிஸ்தான் நாட்டு ராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு காரணம் நமது ராணுவ வீரர்களை கட்டுப்படுத்தியதும், நமது தாக்குதல்

குறித்து பாகிஸ்தானுக்கு நாம் முற்கூட்டியே தகவல் அளித்ததுமே காரணம் என்றார். ராகுல் காந்தியின் இந்தப் பேச்சுகள் பாராளுமன்றத்தில் மிகப்பெரும் அதிர்வலையை ஏற்படுத்தின.




இந்திய துணை ஜனாதிபதி திரு ஜகதீப் தன்கர் அவர்களின் திடீர் ராஜினாமா குறித்தும் இந்தியா கூட்டணி கட்சி உறுப்பினர்கள் விளக்கம் கோரினர். பாஜகவின் முக்கியத் தலைவர்களான மோடி, அமித்ஷா, நட்டா, ராஜ்நாத்சிங், கிரண் ரிஜுஜு உள்ளிட்டோருக்கு இவ்வாண்டின் மழைகாலக் கூட்டத் தொடர் பெரும் சவாலாக அமைந்தது. ஒரு கட்டத்தில் பாஜக ஐடி பிரிவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அமித் மால்வியா, ராகுல்காந்தி ஒரு சீன ஆதரவாளர் என்று பதிலுக்கு விமர்சித்தார். ஆனால் ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகளுக்கு முறையான விளக்கத்தை பாஜக அரசு அளிக்கத் தவறியது.



ஏற்கனவே மின்னணு வாக்கு இயந்திரம் மீதான பல்வேறு சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. கடந்த 2017ஆம் ஆண்டு உத்திரபிரதேச மாநில சட்டமன்றத் தேர்தலில் பாஜக பெற்ற வெற்றிக்குப் பின்னர் பெரிய அளவில் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அப்போது டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், சுப்ரமணியன் சுவாமி உள்ளிட்டோர் ஈவிஎம் மூலம் தேர்தல் முடிவுகளை மாற்றி அமைக்க முடியுமெனக் கூறினர்.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலுக்கு முன்னர் ஈவிஎம்-க்கு எதிராக 21 எதிர்க்கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தன. அதில் அனைத்து தொகுதிகளிலும் 100 சதவிகிதம் ஒப்புகைச் சீட்டு சோதனை தேவை என்றும் கோரினர். ஆனால், உச்சநீதிமன்றம் தொகுதிக்கு வெறும் 5 இயந்திரத்தின் ஒப்புகைச் சீட்டை மட்டுமே சரிபார்க்க உத்தரவு அளித்தது.

இந்தத் தீர்ப்பு நாட்டு மக்களின் நம்பிக்கையைத் தகர்த்தது. கடந்த 2020 ஆண்டு பீகாரிலும், 2022 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்திலும் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் பல்வேறு வாக்குச் சாவடிகளில் ஈவிஎம் இயந்திரங்கள் உரிய கண்காணிப்போ, பாதுகாப்போ இல்லாமல் வாகனங்களில் நகர்த்தப்பட்டன.

இந்திய தேர்தல் ஆணையம், அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, மத்திய புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட அதிகார கட்டமைப்புகளை ஒன்றிய பாஜக அரசு கட்டுப்படுத்தி தங்களின் அரசியல் எதிரிகளை அச்சுறுத்தி வருகிறது என்பது குற்றச்சாட்டு. கடந்த 2014 முதல் 2024 வரை அமலாக்கத்துறையால் பதியப்பட்ட வழக்குகள் சுமார் 540.

இதில் 95 சதவிகிதம் பாஜகவின் எதிர்கட்சியினர் மீதுதான் வழக்குகள் பதியப்பட்டன. கடந்த 11 ஆண்டுகளில் மத்திய புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட சுமார் 300 வழக்கு விசாரணைகளில் 60 சதவிகிதத்திற்கும் அதிகமாக எதிர்கட்சியினரே விசாரிக்கப்பட்டுள்ளனர். அதே காலகட்டத்தில் வருமானவரித் துறையினரால் நாடுமுழுவதும் சுமார் 900 சோதனைகள் நடத்தப்பட்டன. அவற்றில் 90 சதவிகிதம் பாதிக்கப்பட்டோர் எதிர்கட்சியினரே.

**“ பல்வேறு வாக்குச் சாவடிகளில் ஈவிஎம் இயந்திரங்கள் உரிய கண்காணிப்போ, பாதுகாப்போ இல்லாமல் வாகனங்களில் நகர்த்தப்பட்டன. ”**

இந்த நிலையில்தான் இந்திய தேர்தல் ஆணையமும், பாஜகவும் கூட்டு சேர்ந்து ‘வாக்கு திருட்டு’ நடத்தியுள்ளதற்கு ‘அணு குண்டு’ அளவிலான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாக திரு ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார். இம்முறை அணுகுண்டு வெடிக்குமா? அல்லது தேர்தல் ஆணையம் தப்பிக்குமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# முழு பூசணியை சோற்றில் மறைக்கும் நடிகர் சரத்குமாருக்கு பகிரங்க சவால்..!!




மதுரையில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு தமிழக அரசியல் களத்தை சூடாக்கி விட்டது. நடைபெற்ற மாநாட்டில் கொள்கை பிரகடனம் ஏதுமில்லை. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வில்லை.

கூட்ட மேலாண்மைக்கான ஆற்றல் தென்பட வில்லை. திரண்டிருந்த தொண்டர்களை கருத்தியலாய் வார்த்தெடுக்கும் உரைகள் இடம்பெற வில்லை. எங்கள் ஆட்சி மலர்ந்தால் இத்தகைய மாற்றங்கள் நிகழும் என்ற வாக்குறுதிகள் இல்லை.

ஆனால் விஜய்யை பார்ப்பதற்காக அவர் ரசிகர்கள் லட்சக்கணக்கில் திரண்டு ஆர்ப்பரித்தனர். திமுக, அதிமுக, பாஜக, நாதக என்று அனைவரையும் விஜய் விமர்சித்தார். தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாது, பாசிச பாஜகவின் சூழ்ச்சிகள் தமிழகத்தில் எடுபடாது என்றார். மொத்த மாநாடும் ஒன்றரை மணி நேத்தில் முடிந்து விட்டது. தமிழக அரசியல் ஜான்பவான்களுக்கு மத்தியில் தவெகவுக்கு







**மொத்த மாநாடும் ஒன்றரை மணி நேரத்தில் முடிந்து விட்டது. தமிழக அரசியல் ஜான்பவான்களுக்கு மத்தியில் தவெகவுக்கு வெற்றியா? வெற்றிடமா? என்பதை வருங்காலம் தெளிவுபடுத்தும்.**

வெற்றியா? வெற்றிடமா? என்பதை வருங்காலம் தெளிவுபடுத்தும்.

திருட்டு வாக்குகள் மூலமாகத்தான் மோடி 2024இல் பிரதமராகி உள்ளதாக அம்பலப்படுத்தினார் ராகுல்காந்தி. மோடியின் பிரதமர் பதவிக்கே ஆபத்து என்கிறது டில்லி அரசியல் வட்டாரம். தற்போது 'வாக்காளர் உரிமைப் பேரணி' என்று பீகார் மாநிலத்தில் அவர் அதிரடியாக களம் இறங்கியுள்ளார். பீகாரில் தேஜஸ்வி யாதவ் மற்றும் இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள் பாஜகவின் ஜனநாயக விரோத போக்கை தோலுரிக்கின்றனர். அதை எதிர்கொள்ள முடியாத பாஜகவினர் காங்கிரஸ் கட்சியினர் மீது வன்முறை தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்நிலையில் கடந்த 27-08-2025 அன்று தமிழக முதல்வர் ஸ்டாலின் பீகார் சென்று 'வாக்காளர் உரிமைப் பேரணி' யில் கலந்து கொண்டார். 'சாவி' கொடுத்தால் ஆடும் தலையாட்டி பொம்மைபோல தேர்தல் ஆணையத்தை பாஜக மாற்றி விட்டது. 65 லட்சம் பீகார் மக்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியது ஜனநாயகப் படுகொலை ஆகும்.

சொந்த மண்ணில், பிறந்து வாழ்ந்த மக்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதைவிட, பயங்கரவாதம் இருக்க முடியுமா? அனைத்து அடையாள அட்டைகளை வைத்திருந்தாலும், அவர்களை முகவரி இல்லாதவர்கள் போன்று ஆக்குவது அழித்தொழிப்புதானே? என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடுத்த அடுக்கடுக்கான கேள்விகள் தேசிய ஊடகங்களில் விவாதமாகின.

இந்தியா கூட்டணியின் வெற்றியை தடுக்க முடியாத பாஜக குறுக்கு வேலையைப் பார்க்கிறது. அதை தகர்த்தெரியும் இந்தப் போராட்டத்தை வாழ்த்துவதற்காக நான் 2000 கிலோமீட்டர் தூரம் பயணித்து ஒன்றரை மணி நேரத்தில் வந்துள்ளேன் என்றார். மெஜாரிட்டி என்று ஆட்டம் போட்டவர்கள், மைனாரிட்டி ஆகி விட்டார்கள். மக்கள் சக்திக்கு முன், எப்படிப்பட்ட சர்வாதிகாரியும் மண்டியிட்டுதான் ஆக வேண்டும். ராகுல் காந்தி இந்தியாவிற்கான வழக்கறிஞர், அவரால் இந்திய மக்களுக்கு நீதி கிடைக்கும். இந்தியாவில் ஜனநாயகம் தழைக்கும். மக்கள் சக்தியே மகத்தானது என்று முதல்வர் உரையாற்றினார்.

இந்தியாவின் பிரதமராக மோடி ஆட்சி செய்து வரும் 2014ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையிலான நடப்பு காலக்கட்டத்தில், இந்தியாவில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளனர் என்பதை பீகார் பேரணியில் திரளும் லட்சக்கணக்கான மக்கள் திரள் சாட்சி பகர்கிறது. குறிப்பாக தலித் சமூகத்தினர், இஸ்லாமியர் மற்றும் கிருத்துவர்களுக்கு எதிரான கலவரங்கள், வெறுப்புரைகள், இயற்றப்பட்டு வரும் கருப்புச் சட்டங்கள் என அனைத்தும் திட்டமிட்டே நடைபெறுகின்றன. ஆர்எஸ்எஸ், சங்பரிவார சக்திகளால் குறி வைத்து தாக்கப்படும் சமூகமாக இந்திய முஸ்லிம்கள் உள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் கடந்த 24-08-2025 அன்று தமமுக (திரு ஜான்பாண்டியன்) கட்சியின் மாநாட்டில் நடிகர் சரத்குமார் உரையாற்றினார். மோடியை புகழ்ந்தும், நடிகர் விஜய் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தை விமர்சித்;தும் அவரது முழு உரை அமைந்திருந்தது. ஆனால் சந்தடி சாக்கில் இந்திய முஸ்லிம்கள் பிரதமர் மோடியை மிகவும் நேசிப்பதாகவும், மோடியும் முஸ்லிம்கள் மீது அன்பு வைத்துள்ளதாகவும் சரத்குமார் கூறியதுதான் நகை முரண். மேலும் காஷ்மீர் முஸ்லிம் பெண்கள் மோடியின் கையில் ராக்கி கட்டுவதற்கு தவியாய் தவிக்கிறார்கள் என்ற

வஞ்சப் புகழ்ச்சி வஞ்சகப் பேச்சு வேறு.

இந்தியாவில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட வில்லை என்பதால்தான் இஸ்லாமிய அரபு நாடான அபுதாபியில் கோயில் கட்டப்பட்டது, இது பிரதமர் மோடியின் சாதனை ஆகும் என்றார். கடந்த 11 ஆண்டுகள் மோடி ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களோ, பள்ளிவாசல் உடைக்கப்பட்ட சம்பவங்களோ நாட்டில் நடைபெற வில்லை என்றும் உரத்த குரலில் கூறினார். மேலும் காஷ்மீர் தேர்தலில் 25 இடங்களை பாஜக வெற்றி பெற்றதாகவும், ராமர் கோவில் கட்டியது உச்சநீதிமன்ற தீர்ப்பின்படிதான் என்று கூறி சரத்குமார் சந்திரமுகியாய் மாறிய காட்சியை பார்த்தோம்.

தன் இருப்பைக் காட்டிக் கொள்வதற்கு நடிகர் சரத்குமார் இவ்வாறு பேசினாரா? அல்லது வழக்கம்போல நள்ளிரவில் தனது மனைவியிடம் பெற்ற ஆலோசனைபடி இவ்வாறு பேசினாரா? தனது கூற்றில் அவர் உண்மையாளராக இருந்தால் இதையே தலைப்பாக வைத்து எம்மோடு ஒரே மேடையில் விவாதிக்க அவர் தயாரா?



**மாட்டிறைச்சி தடை :** கடந்த 2015 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் மாட்டிறைச்சி தடைச் சட்டம் இயற்றப்பட்டது. ஹரியானா, அசாமிலும் பசுவதைத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு மாட்டிறச்சி விற்பனைக்கு எதிராக கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. இதனால் அசைவ உணவை விரும்பி உண்ணும் அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டாலும், இச்சட்டம் கொண்டு வரப்பட்டதின் நோக்கம் முஸ்லிம்கள் தங்களது பக்ரீத் பெருநாளில் ஆடு, மாடுகளை பலியிடக்கூடாது என்பதே.

**கறுப்புச் சட்டங்கள் :** 2019 ஆம் ஆண்டு குடியுரிமை திருத்தச் சட்டம் என்ற பெயரில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசத்திலிருந்து இந்தியா வரும் முஸ்லிம் அல்லாத அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவோம் என்று மோடி சட்டம் இயற்றினார். அதன் விதிகளை மார்ச் 2024-ல் அறிவித்தார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்கி காஷ்மீர் மாநிலத்தை யூனியன் பிரதேசமாகப் பிரித்தனர். வக்ஃபு திருத்தச் சட்டம் என்று இயற்றி முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக்களில் மூக்கை நுழைத்தனர். அதற்கு பிரதமர் மோடியும், அமித்ஷாவும் சொன்ன கதைகள் ஏராளம், தாராளம். முத்தலாக் தடுப்புச் சட்டம் என்ற பெயரால் முஸ்லீம் பெண்கள் திருமண உரிமைகளில் தலையிட்டதும் யாருடைய ஆட்சியில்? இவை எல்லாம் நடிகர் சரத்குமாருக்கு தெரியாதா?

**லவ் ஜிஹாத் புரளி! பர்தாவுக்கு தடை:** கடந்த 2020-2022 காலகட்டங்களில் நாடு தழுவிய அளவில் இஸ்லாமிய இளைஞர்களுக்கு எதிராக லவ் ஜிஹாத் என்ற வீண் புரளியை கிளப்பியது எந்த ஆட்சியில்? பின்னர் உ.பி, மத்திய பிரதேசம், குஜராத், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் மதமாற்ற தடுப்புச் சட்டங்களை நிறைவேற்றியது யார்? 2022-2023 கால கட்டத்தில் கர்நாடகா மாநிலத்தின் பள்ளி, கல்லூரி மாணவியர் ஹிஜாப் அணியத் தடை விதிக்கப்பட்டது. டெல்லி, உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் முஸ்லீம்களின் வீடுகள், கடைகள் புல்டோசர்கள் கொண்டு இடிக்கப்பட்டன. இவை எல்லாம் முஸ்லிம்கள் மீது மோடி (உள்ளிட்ட சங்பரிவார்கள்) கொண்டுள்ள பேரன்பின் வெளிப்பாடுகளா?

**கும்பல் கொலை :** 2015 ஆம் ஆண்டு உ.பி.யில் மாட்டிறைச்சி வைத்திருந்ததாகக் கூறி அக்லாக் என்ற ஏழை முஸ்லிம் பெரியவர் ஆர்எஸ்எஸ் இயக்கத்தினரால் அடித்தே கொலை செய்யப்பட்டார்.

2017 ஆம் ஆண்டு ஹரியானாவில் ரயிலில் பயணித்த ஜுனைத் கான் என்ற முஸ்லிம் இளைஞர் படுகொலை. அதே ஆண்டு ராஜஸ்தானில் பெஹ்லு கான் என்ற முஸ்லிம் பால் வியாபாரி அடித்து கொலை. 2019 ஆம் ஆண்டு ஜார்கண்ட் மாநிலத்தில் தப்ரேஸ் அன்சாரி என்ற இஸ்லாமியர் ஜெய் ஸ்ரீராம் சொல்ல வற்புறுத்தப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டார். இவ்வாறு பிரதமர் மோடியின் 11 ஆண்டு கால ஆட்சியின் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்ந்து தொடர்கின்றன. நிலைமை இவ்வாறு இருக்க இந்திய முஸ்லிம்கள் பற்றி சரத்குமார் முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது ஏன்?

**கலவரங்கள் :** 2019, 2020 ஆண்டுகளில் நாடெங்கும் நடைபெற்ற குடியுரிமை திருத்தச்சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது டில்லி ஜாமியா பள்ளிவாயில், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களில் முஸ்லிம் மாணவர்கள் மீது தாக்குதல்

தொடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, 2020 பிப்ரவரி மாதம் டெல்லியில் நடைபெற்ற கலவரத்தில் 53 பேர் உயிரிழந்தனர்;. அதில் பாதிக்கப்பட்டதும் முஸ்லீம்கள்தான். அந்த கலவரத்தில் மட்டும் 11 பள்ளிவாயில்கள் தாக்கப்பட்டு, தீ வைத்தும் கொளுத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டு திரிபுரா மாநிலத்தில் சங்பரிவார் நடத்திய கலவரத்தில் 6 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. முஸ்லீம்களின் சொத்துகள் சூரையாடப்பட்டன. 2022 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேச மாநிலம் கார்கோனில் ராமநவமி ஊர்வலத்தை பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை ஆர்எஸ்எஸ் அமைப்பினர் செய்தனர். அதில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான பல வீடுகள் இடிக்கப்பட்டன. டெல்லி ஜஹாங்கிர் புரியிலும் திட்டமிட்டு கலவரத்தை ஏற்படுத்தி முஸ்லீம்களின் வீடுகளை தாக்கினர்.

**தாக்கப்பட்ட பள்ளிவாசல்கள் :** உபியில் 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஷாஹி மஸ்ஜித் சேதப்படுத்தப் பட்டது. முசாஃப்பர் நகரில் அமைந்துள்ள 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு பள்ளிவாயில், புதவுன் நகரிலுள்ள 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த சம்ஷி ஜும்ஆ மசூதி, வாரணாசியிலுள்ள கியான்வாபி ஜும்ஆ மஸ்ஜித் ஆகியவை சர்ச்கையாக்கப்பட்டு எப்போதும் அவை உடைக்கப் படலாம் என்ற நிலையில் உள்ளன.

2023 ஹரியானா மாநிலம் நுஹ் குருகிராமில் சங்பரிவாரின் மதவெறி கலவரத்திற்கு முஸ்லிம்கள் இரையாயினர். 2024 ஜூலை மாதம் மாஹாராஷ்டிர மாநிலம் கோலாப்பூரில் ரஸா ஜும்ஆ பள்ளிவாசலுக்குள் அத்துமீறி நுழைந்து பாசிச குண்டர்கள் அங்கிருந்த புனித குர்ஆனை தீயிட்டு கொளுத்தினார்கள்.

இதுபோன்று முஸ்லிம்களுக்கு எதிராக மோடி சர்க்காரில் நடைபெற்ற அடுக்கடுக்கான சம்பவங்களின் பட்டியலை தருகிறோம். இந்தியாவில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட வில்லை என்று சரத்குமார் அண்ணாச்சி அபுதாபி ஷேக்கிடம் போய் சொல்லிவிட்டு வரட்டும். வெறுப்பு பிரச்சாரங்கள் : 2020 டெல்லியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது ‘கோலி மாரோ சாலாக்கோ’ முஸ்லிம்களை சுட்டுத் தள்ளுங்கள் என்று பாஜகவினர் வெறுப்புரைகளை பரப்பினர். அதனால் தேர்தல் ஆணையம் அவர்களுக்கு தற்காலிக தடை விதித்தது. 2021 டிசம்பர் மாதம் முஸ்லீம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் உரைகளை உடனே நிறுத்துமாறு ஹரித்வார் தர்ம சபைக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது.

வெறுப்பு பிரச்சாரம் செய்வோர் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்திட உத்தர விட்டது. இவை பிரதமர் மோடியின் ஆட்சியில் முஸ்லிம்கள் அடைந்துவரும் பாதிப்புகளின் பட்டியல் மட்டும்தான். ஆர்எஸ்எஸ் இயக்கம் கடந்த 100 ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் செய்துவரும் திட்டமிட்ட சதிகளை சொல்லி மாளாது, எழுதினால் ஏடு தாங்காது.

> “தன் இருப்பைக் காட்டிக் கொள்வதற்கு நடிகர் சரத்குமார் இவ்வாறு பேசினாரா? அல்லது வழக்கம்போல நள்ளிரவில் தனது மனைவியிடம் பெற்ற ஆலோசனைபடி இவ்வாறு பேசினாரா? தனது கூற்றில் அவர் உண்மையாளராக இருந்தால் இதையே தலைப்பாக வைத்து எம்மோடு ஒரே மேடையில் விவாதிக்க அவர் தயாரா?”

எனவே இவற்றை எல்லாம் முதலில் நடிகர் சரத்குமார் படித்தறிய முயலுட்டும். முஸ்லிம்கள் குறித்த சரத்குமாரின் நான்காம்தர எண்ணத்தை அவர் மாற்றிக் கொள்ளட்டும். இல்லையேல் அவர் உண்மையாளராக இருந்தால் இதையே தலைப்பாக வைத்து எம்மோடு பகிரங்க விவாதம் செய்திட அவர் தயாராகட்டும். நாங்க ரெடி, (சங்கி) சரத்குமார்ஜி ரெடியா?

கடந்த 11 ஆண்டுகால ஒன்றிய பாஜக ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள், அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள், எதிர்கட்சிகள் மீதான தாக்குதல்கள், உச்சநீதி மன்றத்தையே ஆட்டிப் படைப்பது, பொருளாதாரம், நீதித்துறை, பத்திரிக்கைதுறை மீதான தொடர் தாக்குதல்கள், ஓட்டு திருட்டு, போலி வாக்காளர்கள் என சிறப்புப் பட்டியலும் உள்ளன. நாடு பேராபத்தில் உள்ளதை உணர்த்தும் அந்தப் பட்டியலை பீகாரில் ராகுல்காந்தி வெளியிட்டு வருகிறார்.

அதனால்தான் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களும் பிகார் பேரணியில் கலந்து கொண்டார். மக்கள் திரள் பேரணி, மாநாட்டை எவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டும்? அதில் கருத்துரைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு பீகாரின் ‘வாக்காளர் உரிமைப் பேரணி’ சிறந்த உதாரணம் என்பதை விஜய்யும், தவெகவினரும் கற்றுக் கொள்வார்கள்.

# ஊடக மௌனம் உண்மையைச் சொல்லாது! பொய்யும், புனைதலும் வாய்மையை வெல்லாது!

பத்திரிக்கைத் துறை ஜனநாயகத்தின் நான்காவது தூணாகும். பத்திரிக்கைதுறையும், செய்தி ஊடகங்களும் ஒரு சமூகத்தின் கண்ணாடியைப் போன்றவை. மக்கள் நலனுக்காக என்றுமே நீதியின் பக்கம் நிற்க வேண்டிய பொறுப்பை அவை ஏற்றுள்ளன.

அரசாங்கம், நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், அல்லது சமூக அமைப்புகள் என அனைவரையும் நோக்கி கேள்வி கேட்கும் உரிமையும், கடமையும் பத்திரிக்கையாளர்களுக்கு உண்டு. அதிகாரத்தின் தவறுகளை வெளிச்சமிடும் பொறுப்பு பத்திரிக்கை துறையினரையே சாரும். அதேவேளையில், உண்மையை மட்டும் சொல்வதும், வதந்திகளை பரப்பாமல் உறுதியான ஆதாரங்களுடன் செய்திகளை வழங்குவதும் அவர்களின் தலையாய கடமையாகும்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் பத்திரிக்கையாளர்கள் பலவிதமான அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். அரசியல் மற்றும் வணிக அழுத்தம் காரணமாக செய்திகளில் நேர்மை குறைந்து வருகிறது. பரபரப்பான தகவல்கள்தான் வேகமாக பரவுகின்றன; உண்மையான தகவல்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

விளம்பர நிதி சார்ந்து செயல்படும் காட்சி ஊடகங்கள் தார்மீக உரிமைகளை இழந்து நிற்கின்றன. நேர்மையாகவும் துணிச்சலோடும் செயல்படும் பத்திரிக்கையாளர்கள் மீது அதிகாரத் தாக்குதல்கள், வழக்குகள், கைது நடவடிக்கைகள் பத்திரிக்கை சுதந்திரத்தையே தகர்க்கின்றன.



கடந்த அக்டோபர் 4, 5 தேதிகளில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற அகில இந்திய பத்திரிக்கையாளர் சங்கத்தின் (ஐஜேயு) தேசிய செயற்குழு கூட்டம் மேற்கண்ட விஷயங்களை கவலையுடன் நினைவுகூர்ந்தது. கடந்த 2023 ஆண்டு அக்டோபர் முதல் இதுவரை இஸ்ரேல் ராணுவத்தால் 240க்கும் மேற்பட்ட சர்வதேச பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



நமது இந்திய நாட்டில் காஷ்மீர், லடாக் பகுதிகளில் மக்கள் போராட்டங்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தின் உண்மை நிலையை வெளிக்கொண்டு வரும் பொறுப்பை பத்திரிக்கையாளர்கள் கோட்டை விட்டது வெட்ககரமானது. இந்த கருத்தை ஐஜேயு பொதுச்செயலாளர் திரு. பல்வீந்தர் சிங் ஜம்மு அவர்கள் தேசிய செயற்குழுவில் தனது அறிக்கையாக சமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது.

செய்தி ஊடகங்கள் எதில் கவனம் செலுத்த வேண்டும்? என்பதையே மறந்துவிட்டன. நடிகர் விஜய் அவருடைய காரவான் வாகனத்தில் இதோ ஏறிவிட்டார், ஒரு கிலோமீட்டர் தொலைவில் நிற்கிறார், விஜய் இதோ வந்து விட்டார் என்று தொடர் வர்ணனைகளை ஒளிபரப்பி இளைஞர்களுக்கு வெறியூட்டியதின் விளைவாக கரூரில் 41 தமிழ் உயிர்களை இழந்து நிற்கிறோம்.

**"அந்த ஊடகத்தை நடத்துபவரின் அந்தரங்கங்கள், அதில் பணிபுரியும் சிலரது குற்றப் பின்னணிகள், அவர்கள் அலுவலகத்திலுள்ள படுக்கையறைகள், பாதிக்கப்பட்ட பெண்கள் என தற்போது மெல்லக் கசியும் ரகசியங்கள் நம்மை அதிர்ச்சி அடையச் செய்கின்றன."**

இன்றுவரை த.வெ.க. குறித்த செய்திகளுக்கு செய்தி ஊடகங்கள் அதீத முக்கியத்துவம் கொடுப்பதன் பின்னணியில் அரசியல் அழுத்தம் இல்லாமல் வேறென்ன?

விசிக தலைவர் திருமாவளவன் அவர்களின் கார் ஒரு வழக்கறிஞரின் இருசக்கர வாகனத்தில் இடித்துவிட்டது! இது நியாயம்தானா? என்று தவறான செய்தியை பெரிதாக்கி, சமூக பதட்டத்தை ஏற்படுத்தி, வழக்கறிஞர்களுக்கிடையில் பிரிவினையை உண்டாக்கியதும் ஒரு ஊடகம்தான்.

மக்களுக்கு எந்தச் செய்தியை கொண்டு சேர்க்க வேண்டும்? என்ற விவஸ்தையே இல்லாதவர்களின் கையில் அந்த ஊடகம் சிக்கியுள்ளது. அந்த ஊடகத்தை நடத்துபவரின் அந்தரங்கங்கள், அதில் பணிபுரியும் சிலரது குற்றப் பின்னணிகள், அவர்கள் அலுவலகத்திலுள்ள படுக்கையறைகள், பாதிக்கப்பட்ட பெண்கள் என தற்போது மெல்லக் கசியும் ரகசியங்கள் நம்மை அதிர்ச்சி அடையச் செய்கின்றன.

இந்நிலையில்தான் இந்தியாவில் முஸ்லிம் மக்கள் தொகை அதிகரிப்பதற்குக் காரணம் பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானிலிருந்து ஊடுருவல்தான் என உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார்.

அமித்ஷா விடமிருந்து இத்தகைய வெறுப்பூட்டும் கருத்துக்கள் வெளிவருவது புதிதல்ல; மதவெறியைத்தூண்டி அரசியல் செய்வதே அவரது வாடிக்கை.

மத அடிப்படையில் மக்களை பிரித்து பேசி, ஊடுருவல்காரர்களாக சித்தரிப்பது நாட்டின் ஒற்றுமைக்கு பேராபத்தாகும். அமித்ஷாவின் கூற்றுக்கு ஆதாரம் எங்கே? அவர்தானே உள்துறை அமைச்சர் — அப்படி யாரும் ஊடுருவி இருந்தால், அந்த ஊடுருவலுக்குப் பொறுப்பு அவர்தானே?

நாட்டின் எல்லையை பாதுகாக்கக் கூடிய ராணுவ வீரர்கள் அத்தகைய ஊடுருவலைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்தார்களா? இது நம் நாட்டு மக்களை மட்டுமல்ல, எல்லையை பாதுகாக்கும் ராணுவ வீரர்களையும் அமித்ஷா கொச்சைப்படுத்துவதாகாதா?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கைபர், போலன் கணவாய் வழியாக ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு இந்தியாவுக்குள்

ஊடுருவியது யார்? மேலும் அத்வானி உள்ளிட்ட பாஜகவின் தலைவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதை மறைத்து வைத்து அமித்ஷா இவ்வாறு பேசுகிறாரா?

உள்துறை அமைச்சர் என்ற பதவி நாட்டின் பாதுகாப்பை மட்டுமல்ல, மதச்சார்பின்மை மற்றும் சமத்துவத்தையும் காக்கும் ஒன்று. 2005 சொராபுதீன் போலி என்கவுண்டர் வழக்கு, 2023 ஆம் ஆண்டு கனடா வன்முறைகள், 2024ல் நாடாளுமன்ற அவையிலேயே அம்பேத்கரை விமர்சித்தது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர் அமித்ஷா.

எனவே, அமித்ஷா அந்தப் பதவியில் இருப்பது நாட்டின் நலனுக்கும், ஜனநாயக மரபுக்கும் உகந்ததல்ல என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்க வேண்டும் — ஆனால் இல்லை.

அமித்ஷா உள்துறை அமைச்சராக இருந்து என்ன கிழித்தார் என்பதற்கு ஊரி, பதன்கோட், புல்வாமா, பெஹல்காம் தாக்குதல்களும், இரண்டு ஆண்டுகளாக பற்றி எரிந்த மணிப்பூர் கலவரமும் சிறந்த சான்றுகளாகும்.

மதவெறி என்பது நாட்டை அழிக்கும் விஷம். அந்த விஷத்தை ஊட்டுபவர்களை மக்களிடையே தோலுரித்து காட்டுவது ஊடகங்களின் அடிப்படை கடமை. ஊடகங்கள் இதுகுறித்து கேள்வி எழுப்பாததும், அதிகார அழுத்தத்திற்கு அஞ்சி மௌனமாகி விட்டதும் வருத்தத்திற்குரியது. எனவே "ஊடக மௌனம் உண்மையைச் சொல்லாது! பொய்யும், புனைதலும் வாய்மையை வெல்லாது!"



இன்றைய உலகில் ஊடகங்கள் மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாக மாறியுள்ளன. ஆனால் நாட்டில் செயல்படும் பெரும் ஊடகங்கள் வீண் அரட்டை, வீண் கேளிக்கை, சினிமா கிசுகிசு போன்ற தரமற்ற செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

கரூர் துயரச் சம்பவம் மற்றும் அதுகுறித்த சிபிஐ விசாரணை என தொடர் செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள், கடந்த இரண்டு ஆண்டுகளாக பெருந்துயரத்திற்கு முடிவாய் அமைந்த சர்வதேச தலைவர்கள் பங்கு கொண்ட காசா அமைதி ஒப்பந்தத்தை கண்டுகொள்ளவே இல்லை. நடிகர் விஜய்க்கு கொடுத்த முக்கியத்துவத்தின் 10 சதவிகிதம் கூட, உலக பொருளாதாரத்திற்காக இவ்வாண்டு நோபல் பரிசு பெற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை.

> **கடந்த இரண்டு ஆண்டுகளாக பெருந்துயரத்திற்கு முடிவாய் அமைந்த சர்வதேச தலைவர்கள் பங்கு கொண்ட காசா அமைதி ஒப்பந்தத்தை கண்டுகொள்ளவே இல்லை. நடிகர் விஜய்க்கு கொடுத்த முக்கியத்துவத்தின் 10 சதவிகிதம் கூட, உலக பொருளாதாரத்திற்காக இவ்வாண்டு நோபல் பரிசு பெற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை.**

இதனால் இளைஞர்களின் சிந்தனை திசைமாற்றம் அடைகிறது. ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் அறிவாற்றல், நெறிமுறை மற்றும் நலனில்தான் தங்கியுள்ளது. எனவே, ஊடகங்கள் நாட்டின் வளர்ச்சி, இளைஞர் நலன், கல்வி முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி போன்ற உயரிய விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இளைஞர்களை சமூகப் பொறுப்புடன் செயல்பட ஊக்குவிப்பதும் ஊடகங்களின் கடமை. அரசின் திட்டங்கள், தொழில் வாய்ப்புகள், புதுமை ஆராய்ச்சிகள் போன்ற தகவல்களை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும். சமூக நீதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண் கல்வி மற்றும் சிறுபான்மையினர் உரிமைகள் போன்ற விடயங்களில் ஊடகங்கள் முன்னோடியாக இருக்க வேண்டும்.

ஊடகம் ஒரு வணிகம் அல்ல — அது ஒரு பொறுப்பு. மக்கள் சிந்தனையை மாற்றும் ஆற்றல் ஊடகவியலாளர்களிடமே உள்ளது. அந்த ஆற்றலை வீணான கேளிக்கையில் அல்லாது, நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்று இந்தக் கட்டுரை வாயிலாக வேண்டுகிறேன்.







*அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்பூரில் அகில இந்திய தலைவர் தோழர் கே.ஸ்ரீநிவாச ரெட்டி அவர்கள் தலைமையில் கடந்த 05-10-2025 அன்று நடைபெற்றது.*

*அப்போது அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தேசியக்குழு உறுப்பினராக நான் மீண்டும் தேர்வு செய்யப்பட்ட போது...*



# ஒரே நாடு..! ஒரே பிராடு..!!

## தவறிழைத்து தடுமாறும் தேர்தல் ஆணையம்!



ஹரியானா மாநிலம் வாக்காளர் பட்டியலில் பெரும் குளறுபடி நடந்துள்ளதை திரு ராகுல்காந்தி செய்தியாளர்கள் சந்திப்பு வாயிலாக நாட்டு மக்களுக்கு வெளியிட்டார்.


கர்நாடகம், மஹாராஷ்டிரம், பீகார் மாநிலங்களைத் தொடர்ந்து ஹர்யானா மாநிலத்திலும் வாக்கு முறைகேடுகள் நடந்துள்ளதை பல ஆதாரங்கள் மூலம் அவர் நிரூபித்தார்.

இது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், வாக்காளர் பட்டியலிலேயே அப்பட்டமான அட்டூழியத்தை அரங்கேற்றி, மக்களின் ஜனநாயகத் தீர்ப்பைக் களவாண்டு தேர்தல் ஆணையம் அம்பலப்பட்டு நிற்கிறது என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது கண்டனக் குரலை பதிவு செய்துள்ளார்.

இந்த லச்சனத்தில்தான் இந்திய ஒன்றிய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டிலும் எஸ்.ஐ.ஆர் எனும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தொடங்கியுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்கு திருட்டின் மூலம் நாட்டின் ஜனநாயகத்தையே பந்தாடி வருவதை நாடே அறியும். கால்பந்தாட்டத்திற்கு பிரேசில் நாடு உலகளவில் பெயர் பெற்றது.

பிரேசிலைச் சார்ந்த மாடல் அழகி லரிசா பொனாசியின் படம் ஹரியானா வாக்காளர்



**“வாக்காளர் பட்டியலிலேயே அப்பட்டமான அட்டூழியத்தை அரங்கேற்றி, மக்களின் ஜனநாயகத் தீர்ப்பைக் களவாண்டு தேர்தல் ஆணையம் அம்பலப்பட்டு நிற்கிறது என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது கண்டனக் குரலை பதிவு செய்துள்ளார்.”**



**“மின்னணு வாக்கு இயந்திரத்திற்குப் பின்னால் இருந்த பாசிச சூழ்ச்சியை காங்கிரஸ் உணரத் தவறிவிட்டது.”**

பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. பேரசிலின் ஆவி இந்திய தேர்தல் ஆணையத்தில் புகுந்து விட்டது போலும். பிரேசில் நாட்டோடு நல்லுறவை இப்படியா பேணுவது?

இது பிரேசில் நாட்டோடு நிற்குமா? அல்லது அர்ஜென்டினா, ஜெர்மனி, இத்தாலி, போர்ச்சுகல் நாடுகளின் கல்பந்தாட்ட அணிகளுக்கும் இந்தியாவில் ரசிகர்கள் இருப்பதினால் அவர்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்படுமா?

இதுதான் பலருடைய கேள்வி. கால்பந்தாட்ட ரசிகர்களுக்கு மட்டும் தேர்தல் ஆணையம் ஆதரவு என்றால், கிரிக்கெட் ரசிகர்கள் நீதி கேட்டு முறையிடுவதும் நியாயம்தானே.

ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா கிரிக்கெட் அணிகளுக்கும் நம் நாட்டில் ரசிகர்கள் உண்டு. மேற்படி நாடுகளின் மாடல் அழகிகளையும் நம் வாக்காளர் பட்டியலில் சேர்த்து வண்ணமய மாக்கியனால் என்ன கெட்டுவிடப் போகிறது?

ஹரியானாவில் ஒரே வீட்டில் 501 வாக்குகள் இருப்பதைப் போல, தேர்தல் ஆணையம் இதையும் பரிசீலனை செய்யும் என்றே எதிர் பார்க்கிறோம்.

கடந்த 2024 ஆண்டு நடைபெற்ற ஹரியானா சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் சூழ்ச்சி மூலம் திருடப்பட்டது என்பதே ராகுல்காந்தியின் பிரதான குற்றச்சாட்டு. சுமார் 25 லட்சம் போலி வாக்காளர்கள் ஹர்யானாவின் வாக்காளர் பட்டியலில் இணைக்கப் பட்டுள்ளனர்.

இது மொத்தமுள்ள 2 கோடி ஹர்யானா வாக்காளர்களில் 12.5 சதவிகிதம் ஆகும். காங்கிரஸ் சுமார் எட்டு தொகுதிகளில் சுமார் 22 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

மொத்தம் 1.18 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் காங்கிரஸ் ஆட்சியை பிடிக்க இயலாமல் போனது. தேர்தல் ஆணையத்தின் துணைகொண்டு, போலி வாக்குகள் மூலம்தான்

பாஜக ஹர்யானாவின் ஆட்சியைக் கைப்பற்றியது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஹரியானாவின் வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 3.5 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதாகவும், அவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்றும், பீகார் தேர்தலிலும் இதே போன்ற முறைகேடுகள் நடக்கும் என்றும் ராகுல் காந்தி கூறுகிறார்.

அதை உண்மைபடுத்தும் வகையில் பீஹார் மாநிலத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருக்கும் போதே, முதல்வரின் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், 10 லட்சம் பெண்களின் வங்கிக் கணக்குகளில் ரூபாய் 10 ஆயிரம் வீதம் பணம் செலுத்தப்பட்டது.

அதாவது, பீஹாரில் வாக்குகளை வாங்குவதற்காக பாஜக சுமார் 700 கோடி வரிப்பணத்தை செலவழித்துள்ளது. தேர்தல் ஆணையம் வழக்கம்போல இதை கண்டுகொள்ள வில்லை.

ஒரு காலத்தில் இந்திய தேர்தல் ஆணையம் எவ்வாறு செயல்பட்டது? காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலங்களில் இந்திய தேர்தல் ஆணையத்தின் நம்பிக்கைத் தன்மை கட்டிக் காக்கப்பட்டது.

பிரதமர்கள் ராஜீவ் காந்தி, நரசிம்ம ராவ், மன்மோகன் சிங் ஆகியோரின் ஆட்சிகளில் இந்திய தேர்தல் வரலாற்றில் தூய்மை, வெளிப்படைத் தன்மை, தொழில்நுட்பம் சார்ந்த முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. புகைப்பட அடையாளத்தோடு கூடிய வாக்காளர் பட்டியல், ஆன்லைன் சேவைகள் என நவீன ஜனநாயக மாற்றம் நாடளவில் உருவாக்கப் பட்டது.

1988,1989 ஆண்டுகளில், அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் வழிகாட்டுதலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்கு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. Representation of the People Act, 1951 மற்றும் Registration of Electors Rules, 1960 திருத்தப்பட்டது.

அதன் காரணமாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) முறைமைக்கு சட்ட அடித்தளம் அமைக்கப்பட்டது. இது போலி வாக்குகள், அடையாள மோசடிகள் தவிர்க்கும் நோக்கில் இந்திய தேர்தல் வரலாற்றில் மிகப் பெரிய முன்னேற்றம் எனலாம்.

அதன் பிறகு 1993 ஆம் ஆண்டு பிரதமர் நரசிம்மராவ் ஆட்சி காலத்தில் EPIC (Voter ID) புகைப்பட அடையாள அட்டை திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது நாடளவில் வாக்காளர் பட்டியலை தூய்மைப்படுத்தும் பெரிய முயற்சியாக கருதப்பட்டது.

**“ 2019 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து 50% ஒப்புகைச் சீட்டுகளை சரிபார்க்க வேண்டும் என கோரிக்கை வைத்தன. ஆனால் தேர்தல் ஆணையம் அதை மறுத்தது. ”**



பிறகு 1998 - 1999 ஆண்டுகளில் ஐ.கே குஜ்ரால் மற்றும் வாஜ்பாய் ஆட்சி காலங்களில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) சோதனை அடிப்படையில் அறிமுகப் படுத்தப்பட்டது.

தேர்தல் முடிவுகளை விரைவாக அறிவிக்க முடியும் என்ற பிரச்சாரத்தை முன்னிறுத்தி, வாக்குப்பதிவு இயந்திரங்கள் 1998-ல் பல மாநிலங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

பிறகு 2004 ஆண்டில் மீண்டும் பாஜகவின் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆட்சி காலத்தில்தான் 100% மின்வாக்குப் பதிவு நாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டது. இந்தியா உலகின் முதல் முழுமையாக மின்வாக்கு பயன்படுத்தும் நாடாக பெருமை கூறப்பட்டது.

காங்கிரஸ் கட்சி அதை முன்னேற்றம் என்ற அடிப்படையில் மட்டும் அனுகியது. மின்னனு வாக்கு இயந்திரத்திற்குப் பின்னால் இருந்த பாசிச சூழ்ச்சியை காங்கிரஸ் உணரத் தவறிவிட்டது.

2009இல் பிரதமராக இருந்த டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், தேர்தல் ஆணையத்தின் பணி ‘தேர்தல் நடத்துவது மட்டுமல்ல அது நாட்டின் ஜனநாயகத்தை கட்டமைப்பது என்ற புதிய பரிமாணத்தை உருவாக்கினார்.

SVEEP திட்டம் Systematic Voters’ Education & Electoral Participation எனும் வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் பதிவுக்கான தேசியத் திட்டத்தை தந்தார். இதன் காரணமாக நாட்டில் வாக்காளர் பதிவு உயர்ந்தது. தேர்தல்களில் இளைஞர்கள், பெண்களின் பங்கேற்பை அது ஊக்குவித்தது.

2010, 2011 ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் டிஜிட்டல் வாக்காளர் பட்டியல்



> 2014இல் பாஜகவின் மோடி சர்க்கார் பதவியேற்றது முதல் தற்போதுவரை உள்ள 11 ஆண்டுகளில், இந்திய தேர்தல் ஆணையம் தவறிழைத்து தடுமாறுகிறது.

மாநிலங்கள் வாரியாக இணையதளங்களில் தேடல்முறை வடிவில் வெளியிடப்பட்டது.

இதனால் பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் விவரங்களை ஆன்லைனில் சரிபார்க்க முடிந்தது. இது பின்னர் NVSP–க்கு அடித்தளமானது.

2013 இல் VVPAT (Verified Voter Paper Audit Trail) திட்டத்தை அறிமுகப் படுத்தியதும் காங்கிரஸ் ஆட்சியில்தான். அன்று சுப்பிரமணியன் சுவாமி தொடர்ந்த வழக்கில் வி.வி.பி.ஏ.டி முறை அறிமுகம் செய்ய உச்சநீதிமன்றம் உத்தர விட்டது. அதன் காரணமாக நாகாலாந்து, மிசோரம், டெல்லி சட்டமன்றத் தேர்தல்களில் வி.வி.பி.ஏ.டி முறை சோதனை செய்யப்பட்டது. இது மின்னணு வாக்குமுறையின் நம்பகத்தன்மை, வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் முயற்சியாகக் கருதப்பட்டது.

2013, 2014 ஆண்டு டாக்டர் மன்மோகன்சிங் ஆட்சி காலத்தில், NVSP திட்டம் (National Voter Service Portal) உறுவாக்கப்பட்டது.

வாக்காளர் சேவைகளை ஒருங்கிணைக்கும் தேசிய ஆன்லைன் திட்டத்தின் மூலம் வாக்காளர் பெயர் பதிவு, பெயர் திருத்தம், புகார், வாக்காளர் பதிவு தேடல் போன்ற அனைத்தும் ஒரே தளத்தில் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு காங்கிரஸ் ஆட்சி காலங்களில், தேர்தல் ஆணையம் ஒருங்கிணைந்த வாக்காளர் சேவைக்கு e-Governance அடித்தளம் இட்டது.

இப்படி தூரநோக்குப் பார்வையுடன் செயல்பட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் இன்றைய நிலை என்ன? 2014இல் பாஜகவின் மோடி சர்க்கார் பதவியேற்றது முதல் தற்போதுவரை உள்ள 11 ஆண்டுகளில், இந்திய தேர்தல் ஆணையம் தவறிழைத்து தடுமாறுகிறது. அநீதமான பல செயல்பாடுகளால் அதன் நம்பகத்தன்மை சீர்குலைந்து விட்டது.

தற்போது தேர்தல் மோசடிகள் செய்து, வாக்குத் திருட்டில் ஈடுபட்டுள்ள விவகாரம் நாட்டு மக்களிடம் நம்பிக்கை இழப்பை ஏற்படுத்தி விட்டது. தேர்தல் ஆணையம் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு சுயாட்சி அமைப்பு என்ற நிலையை பாஜக மாற்றி விட்டது.

கடந்த 2019 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது பிரதமர் மோடியும், அமித்ஷாவும் தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக பல புகார்கள் அளிக்கப்பட்டன. அவற்றை கண்டுகொள்ளாத தேர்தல் ஆணையம், மோடியும், அமித்ஷாவும் பரிசுத்தவான்கள் என கிளீன் சிட் சான்றிதழ் அளித்தது.

மோடி விசாரிக்கப்படாமல் விடுவிப்பதை தேர்தல் ஆணையர் அசோக் லவாசா எதிர்த்தார். ஆனால் அவரது கருத்து புறக்கணிக்கப்பட்டது. பின்னர் லவாசா பழிவாங்கப்பட்டு, வெளிநாட்டு பதவிக்கு மாற்றப்பட்டார்.

2019 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து 50% ஒப்புகைச் சீட்டுகளை சரிபார்க்க வேண்டும் என கோரிக்கை வைத்தன. ஆனால் தேர்தல் ஆணையம் அதை மறுத்தது. ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் 5 வாக்குச் சாவடிகள் மட்டும் சரிபார்ப்பு என தீர்மானித்தது.

கடந்த 2021 சட்டமன்ற தேர்தல்களின் போது அசாம், உத்தரப் பிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் பாஜக நிர்வாகிகளின் வாகனங்களில் வாக்கு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இவை காப்புப்பிரதி (ரிசர்வ்) ஈவிஎம்கள் என தேர்தல் ஆணையம் சப்பைகட்டு கட்டியது.

ஈ.வி.எம் வடிவமைப்பு மற்றும் ஆய்வில் வெளிப்படைத் தன்மை இல்லாமல் போனது. ஈ.வி.எம்களின் சாப்ட்வேர், அதன் உற்பத்தி தகவல்களை, தகவல் பெறும் உரிமைச் சட்டம் வழியாக கோரப்பட்டபோது அவை'தேசிய பாதுகாப்பு குறித்த அம்சங்கள் எனக் கூறி தேர்தல் ஆணையம் பதிலளிக்க மறுப்பு தெரிவித்தது.



> **“இந்திய ஒன்றிய தேர்தல் ஆணையத்தின் முழு ஒத்துழைப்போடு நாடளவில் ஒரே நாடு! ஒரே பிராடு! என்ற ரீதியில் ஓட்டு திருட்டுகள் நடைபெற்றுள்ளது தற்போது அம்பலமாகி விட்டது.”**

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா தேர்தல்களின் அறிவிப்புகளை தாமதமாக அறிவித்தது. பாஜக அரசின் திட்டங்கள், அறிவிப்புகளை வெளியிட அனுமதியும் அளித்தது. இவ்வாறு தாமதமாக அறிவிக்கப்பட்ட தேர்தல் தேதி அறிவிப்பு பாஜக ஆட்சி அமைந்திட சாதகமாக்கியது.

2019 ஆம் ஆண்டு யோகி ஆதித்யநாத்’மோடிஜியின் சேனா என்று தொடங்கி தலித், இஸ்லாமியர், கிருஸ்துவர்கள் மீதான வெறுப்புப் பேச்சுகளை தொடர்ச்சியாக உமிழ்ந்தார். அதற்கும் தேர்தல் ஆணையம் மென்மையான எச்சரிக்கை மட்டுமே வழங்கியது.

கடந்த 2021 ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காலத்தில் தமிழ்நாடு, மேற்கு வங்கம், அசாம் மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களின் போது பெரிய கூட்டங்களுக்கு அனுமதி அளித்தது.

இந்தியாவில் கொரோனா இரண்டாம் அலையை ஏற்படுத்தியதற்கு தேர்தல் ஆணையமே பொறுப்பு என்று நீதிமன்றங்கள் கூறும் அளவுக்கு நிலைமை மோசமானது. தங்களுக்கு எதிரான அந்தக் கருத்தை நீக்கக் கோரி தேர்தல் ஆணையம் அளித்த மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்தது.

நாடு முழவதும் உள்ள பல IAS,IPS அதிகாரிகள் ஒன்றிய ஆட்சிக்கு எதிராக இருந்ததால் மாற்றப்பட்டனர். மேற்கு வங்கம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு பாஜக சார்பு அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர்.

முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா உள்ளிட்ட சில தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஓய்வு பெற்றவுடன் அவர்களுக்கு பாஜகவிலும், ஒன்றிய ஆட்சியிலும் முக்கியப் பதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த 2020 முதல் 2023 வரையுள்ள காலகட்டங்களில் நாடளவில் நடைபெற்ற இந்த முறைகேட்டை தேசிய ஊடகங்கள் விமர்சித்தன. மேற்படி அதிகாரிகளின் ஓய்வுக்குப் பிறகு வழங்கப்பட்ட பதவிகள் இந்திய சுயாட்சி மீதான தாக்குதலாக கருதின.

இந்தியாவின் மேனாள் தலைமை தேர்தல் ஆணையர்களாக பணியாற்றிய டி.என். சேஷன், குரேஷி, அசோக் லவாசா உள்ளிட்டோரும் இக்கருத்தையே வழிமொழிந்தனர்.

பீகாரில் சுமார் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியதைப் போல மகாராஷ்டிரா, தெலுங்கானா, கர்நாடகா, தில்லி, ஹர்யானா உள்ளிட்ட மாநிலங்களிலும்; பல லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இந்திய ஒன்றிய தேர்தல் ஆணையத்தின் முழு ஒத்துழைப்போடு நாடளவில் ஒரே நாடு! ஒரே பிராடு! என்ற ரீதியில் ஓட்டு திருட்டுகள் நடைபெற்றுள்ளது தற்போது அம்பலமாகி விட்டது. இந்த நிலையில்தான் தமிழ்நாட்டிலும் எஸ்.ஐ.ஆர் எனும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் முழு வீச்சில் நடைபெறுகிறது.

எந்தெந்த ஆவணங்களை எப்படி கொடுப்பது? என தமிழக மக்கள் குழப்பத்திற்கும், நெருக்கடிக்கும் உள்ளக்கப் பட்டுள்ளனர். திமுக மற்றும் அதன் தோழமை கட்சிகளின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டும் உள்ளது.

எஸ்.ஐ.ஆர் மூலம் கோரப்படும் ஆவணங்களை நாம் ஆய்வு செய்யும்போது, அது குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒன்றிய பாஜக அரசு மறைமுகமாக அமல்படுத்துவதாக நாம் உணர்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர் பணி நிறைவு பெற்றபின் எத்தனை லட்சம் தமிழர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப் போகிறார்கள்? எந்தெந்த நாடுகளின் மாடல் அழகிகள் தமிழ்நாட்டின் வாக்காளர் பட்டியலில் இடம்பெறப் போகிறார்கள்? என்பதை நாமும் பார்ப்பதற்கு தயாராகவே இருக்கிறோம்.

# வாழ்த்து மடல்...



வரகவி இறை நேசராக
வந்துதித்த காசிம் புலவர்
வாரிசாக வளநகர் காயல்
வாழுகின்ற அகமது சாகிப்
அரசியல் ஆன்மீகக் கல்வி
அறிவியல் பண்பாட்டுச் செல்வர்
தரம் பெருக்குந் தமிழுடனே
தழுவும் பல மொழியில் வலர்
தாரகமாம் சமதர்மம்
தாங்குகின்ற தூணாகி
தக்கவர்க்குத் தக்க துணை
தருகின்றார் நாளெல்லாம்.
ஆய கலை அறுபத் தைந்தும்
அனுதினமும் ஆற்ற வல்லார்
காய்தலுடன் உவத்தலின்றி
கச்சிதமாய் களப்பணிகள்
ஒய்தலுடன் ஒளித்தலின்றி
ஓங்கிடவே உழைக்கின்றார்
பாய்ந்து வரும் சிறுத்தையென
பாரெல்லாம் பார்க்குமிவர்
பரப்புரையில் தரமிருக்கும்
பக்குவத்தின் உரமிருக்கும்.
ஆர்த்தெழுந்து வரும் கடலலைபோல்
அடுக்கடுக்காய் தரவுகள் தந்து

நேர்முகங்கள் நேரலை களத்தில்
நெத்தியடி விடைகள் இருக்கும்.
தாயகத்துக் கப்பால் சென்று
தானறிந்த கல்வித் திறத்தால்
தேயம் பல விரும்பும் பணிகள்
தேர்ந்தெடுத்து பொருளும் ஈட்டி
வாய்ப்பதுபோல் பலர்க்கும் வழிகள்
வழக்கறிஞர் நிலையில் காட்டி
தீயவர்க்கு தீயாய் மாறும்
திட்டமுடன் சட்டமும் செய்வார்.
தூயத்தமிழ் துலக்கும் உரையால்
தூர்த்தெடுப்பார் மடமைக் குளங்கள்.
தமிழ் மேயவரும் இந்தி எருமையை
மேருமலையாகித் தடுப்பார்.
ஏய்த்திடவே எண்ணிடுவோர் தம்
எதிருரைகள் இவர் முன் வந்தால்
மாய்ந்து விழச் செய்திட வல்ல
மந்திரத்தைக் கற்றவரென்று.
தோய்ந்தெழுந்த ஊடகத்தார் முன்
தோன்றுகின்ற தோழமையென்று
ஆய்ந்தறிந்த அறிஞர் பலரும்
ஆற்றுகின்ற சான்றுரை கண்டு
வாய் பிளந்து வியப்பவர் பலரின்
வரிசையிலே நானும் ஒருவன்...

**இலக்கியச் சுடர் கா. அகமது கபீர்**

இஸ்லாமிய இலக்கியக் கழக செயற்குழு உறுப்பினர்.
தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்க குமரி மாவட்டச் செயலாளர்.

# பங்குபெற்ற ஊடக விவாதங்கள்




அறியாயிருள் நீக்கி அறிவொளிச் சுடர் பாய்ச்சி வெல்க தமிழ் என்றே முழங்குவோம்..!